உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பால பாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருச] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ௵ ஆனி௴ கஅ௳ (1942 ஜூலாய் 2 வியாழக்கிழமை) [இலக்கம் உக]

கிளஸ்டர் கோமகன் விமானத்திற் புறப்பட்டார்

இலங்கைமக்களுக்குப் பிரியாவிடைச் செய்தி

மகிமை தங்கிய கிளஸ்டர் கோமகன் தமது இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு மிகவும் சாதகமான கால நிலையின் போது விமான மார்க்கமாகத் திரும்பினார். அவர் பிரயாணமான விமானம் மேலே கிளம்பியதும் போர் விமானக் கோஷ்டியொன்று துணையாகப் பறந்தது.

கோமகனின் புறப்பாட்டை எதிர்பார்த்த பல பிரமுகர்கள் விமான நிலையத்திற்குக் காலாகாலத்தில் வந்து அரசக்கொடி பறக்க விடப்பட்டிருந்த விமானத்தைச் சூழ்ந்து நின்றனர்.

கோமகனை ஏற்றிவந்தகார் நெருங்கியதும் பிரதம தளகர்த்தர் மேன்மைதங்கிய தேசாதிபதியுடன் சென்று அவரை உபசரித்தார். லெப்டினண்ட் ஜெனரல் ஸேர். ஹென்றி பௌனல் விமானவைஸ் மார்ஷல் டி அல்பியாக் ரியர் அட்மிரல் ஏ டி ரீட் ஆகியோரும் கோமகனை உபசரித்து வாழ்த்தினர்.

கோமகனின் பிரியாவிடைச் செய்தி

கிளஸ்டர் கோமகன் சொற்ப நேரங்களை சம்பாஷித்தபின் பிரியாவிடை பெற்று விமானத்தில் ஏறினார்.

இவ்வைபவம் எவ்வித ஆடம்பரமுமின்றி நடைபெற்றது. சொற்ப காலத்தில் பலவிடங்களைத் தாம் சுற்றிப் பார்த்ததாகவும் அவை யாவும் தமக்கு மிகுந்த திருப்தியை யளித்திருப்பதாகவும் கோமகன் குறிப்பிட்டுப் பின்வருஞ் செய்தியை இலங்கை மக்களுக்கு விடுத்தார்:—

சிறிது காலம்வரை உங்கள் நாட்டுக்கு நான் விஜயம் செய்தபின்னர், உங்களுக்குப் பிரியாவிடை கூறுகிறேன். எனது சுற்றுப் பிரயாணத்தை ஒழுங்கு செய்ததற்குக் காரணமாயுள்ள யாவருக்கும் நான் எனது நன்றியைச் செலுத்த விரும்புகிறேன்.

இதனோடு இலங்கையைச் சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் நான் பார்வையிட்டிருக்கிறேன். மீண்டும் மிக மகிழ்ச்சி பொருந்திய காலத்தில் நான் இங்கே விஜயம் செய்யக்கூடுமென்று நம்புகிறேன். உங்கள் வனப்பு வாய்ந்த தீவு யுத்தத்திற்குரியதல்ல. ஆனால், யுத்தத்தை இலங்கைக்கும் பரவச்செய்யச் சத்துரு தீர்மானித்திருப்பதால் அழகான சாதனைக்க எப்படிக் கடினமாக விருக்கிறதோ அதேபோல, இலங்கையின் வனப்பும் கடினமும் பலமுமிருக்கிறதென்பதை இந்த யுத்தம் நிரூபிக்கட்டும்.

படைகளுக்கும் மக்களுக்கும் பாராட்டு

எனது தாய்நாட்டைப் போன்று இலங்கையும் ஓர் அரணாகும். படையெடுக்கும் அலைகள் இதன்மீது வருமெனில் பயனின்றித் தகர்வுறும். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடு ஒன்றுபடுத்தும் ஐக்கியம் இரு தீவுகளிலு மிருக்கிறதென்பதற்குப் பிரத்தியட்சமான சான்றிருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் பற்பல பகுதிகளையும் சேர்ந்த துருப்புகள் தங்கள் தாய்நாடுகளிலிருந்து அதிக தூரத்திலுள்ள இந்நாட்டில் நமது நேசதேசத் துருப்புகளுக்காதரவாகச் சேவை செய்கின்றன. நட்பே இவர்கள் யாவரையும் ஒன்றுபடுத்துகிறது.

இலங்கையிலுள்ள துருப்புகள் நடந்து கொள்ளும் மாதிரி எனக்கு மிகத் திருப்தியளித்திருக்கிறது. யுத்தமுறையின் சகல நிலைமைகளிலும் கட்டுப்பாடான பயிற்சியைத் தாம் பெற்று எதையும் சமாளிப்பதற்கான சரீரபலத்தையும் மனோபலத்தையும் தாமடையக்கூடுமென்பதை இவர்கள் உணர்ந்திருக்கின்றனரென்பதை நானறிவேன். பாதுகாப்புடன் இப்பொழுது இவர்கள் பலமாக எதிர்க்கக்கூடும். ஆனால், தாக்கவேண்டிய சமயம் வந்ததும் இவர்கள் மிகவும் பலமாகத் தாக்குவர் என்பதைச் சத்துரு உணருவான்.

நான் கேள்விப்பட்டதுபோல் இலங்கையின் பொதுஜனப் பாதுகாப்புச் சேவைகள் சிறந்த பயிற்சி பெற்றிருக்கின்றன. பொதுநலச் சேவையிலீடுபட்டிருக்கும் ஆடவர்களும் ஸ்திரீகளும் சிறந்த வேலை செய்து வருகின்றனர். பொதுமக்கள் படைகளுடன் மிக அற்புதமான முறையில் ஒத்துழைக்கின்றனர். இவர்கள் யாவருக்கும் எனது வாழ்த்தை நான் தெரிவிக்கிறேன். ஒவ்வொரு ஆடவரும் ஸ்திரீயும் தாம் எவ்வித வேலையிலீடுபடினுஞ் சரி, வெற்றித் தினத்தைத் துரிதப்படுத்தும் பொருட்டுத் தாம் செய்ய வேண்டியவற்றைத் தமது முழுப் பலத்துடனும் செய்வாராக.

பயிற்சியளிப்பது தயாராவது உற்சாகமூட்டுவது பல பாகங்களைக் காவல் செய்வது இவ்வேலைகள் யுத்தத்தின் மிகக்கடினமான சோதனைகளிலொன்றாகும். சத்துரு தாக்குதலின்போது தைரியத்துடன் எதிர்த்துப் போராடியும் மேலும்பல யுத்த சகாயநிதிகளுக்கு விசுவாசத்துடன் ஆதரவளித்தும் எனது வேண்டுகோளுக்கிணங்கிச் செஞ்சிலுவை சென்ட்ஜோன் நிதிக்கு நன்கொடைகளை உதவியும் தமது திறமையையும் [illegible] சக்தியைக் காண்பித்த இலங்கை மக்களும் படைகளும் விடாமுயற்சியுடனும் தமது மனோவுறுதியுடனும் நமது விவகாரத்தின் வெற்றிக்காகவும் சத்துருவின் அழிவுக்காகவும் தம்மாலியன்றளவு ஆதரவளிப்பாரென்று நானறிவேன்.

ருஷிய—ஜப்பான் யுத்தமா?

வாஷிங்டன் ஜூன் 28

ருஷியக் கப்பல் ஒன்று ஜப்பானியரால் ஆழ்த்தப்பட்டது பற்றிய மொஸ்கோ றேடியோவின் உத்தியோக அறிக்கையை "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் வியாக்கியானஞ் செய்யும்போது கூறுவதாவது:—இரு அரசாங்கங்களுக்கு மிடையே தொடர்பாகப் பல சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாயும் இனிமேற் பேசாமலிருப்பதால் ஓர் உபயோகமும் ஏற்படமாட்டாதென்றும் இத்துறை நிபுணர்கள் நினைக்கின்றனர்.

பட்டினசபைக் கூட்டம் பின்போட்டு வைக்கப்பட்டது

ரத்னபுரி ஜூன் 26—

இரண்டாவது முறையாக இரத்தினபுரிப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் கோரமின்மை காரணமாக நேற்றுமுன்தினம் பின்போட்டு வைக்கப்பட்டது.

தலைவர் திரு. ஏ. வி. அட்டிகலே உட்படச் சிலஅங்கத்தினர் கூட்டத்திற்கு வரத் தவறினர். உபதலைவர் திரு. எம். டி. வி. குணரத்னவும் திருவாளர்கள் ஜி. எல். டெல்கொடை, டி. எல். அமரசேகரா ஆகியோரும் கூட்டத்திற்கு வந்தனர்.

ராஜாஜி மீது கிலெண்ணெய்ப் பந்து வீச்சு

பம்பாய்க் கூட்டத்தில் விஷமிகளின் செயல்

பம்பாய் ஜூன் 26—

"தேசமக்களுக்கு அதிக ஆர்வத்துடன் விடப்படும் வேண்டுகோள் இந்தியாவைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் அபாயத்தை அலட்சியமாகக் கருதிவிடமாட்டாது. ஒருவர் தனது சொந்த அபிப்பிராயத்தைத் தற்காலிகமாகத் தள்ளிவைப்பதன் மூலம் பெரிய ஒரு தியாகத்தைச் செய்தேனும் ஒற்றுமையுடனிருக்கவேண்டும்" என்று ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் நேற்றிரவு மட்டுங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். தேசம் விடுதலையடைந்து விட்டால் தேசத்தில் பிரிவினைகளிருந்த போதிலும் லட்சியம் செய்யப்போவதில்லையென அழுத்தமாகத் தெரிவித்தார்.

ஒரு சம்பவம்

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் அங்கே குழப்பம் அதிகம் இருந்தது. கூட்டத்திலிருந்த ஒருவர் கிலெண்ணெய் நிரப்பப்பட்ட காகிதப் பந்து ஒன்றை ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மண்டபத்தில் பிரவேசிக்கையில் அவர் மீது வீசியெறிந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அமைதி ஏற்பட்டுவிட்டது.

ராஜாஜி பேச எழுந்ததும் கூட்டத்திலிருந்தவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். நடந்த சம்பவத்தைக் குறித்து அவர் தமது வருத்தத்தைத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"ஏது இந்தக் கிலெண்ணெய்! அது ஒன்றுமில்லை இதைப்பார்க்கிலும் இன்னும் அதிகமாகத் தார்பூசப்படுவதற்கும் அதிகமான நிந்தனைக்கும் நான் தயாராக இருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா! என்னுடைய செல்வாக்கு நோக்கங்கள் இவைகள் கூடத் தாக்கப்படலாம்.

ஜின்னாவை மீண்டும் சந்தித்தார்

பிற்பகலிற் சிறிது நேரத்திற்குமுன் ராஜாஜி ஜனாப் ஜின்னாவுடன் 5 மணி நேரம் சம்பாஷணை செய்தார், ஹிந்து முஸ்லிம் பிரச்னை சம்பந்தமாக வெவ்வேறு அம்சங்களைப்பற்றி இருதலைவர்களும் விவாதித்தனர். ராஜாஜி இன்று வார்தாவுக்குப் புறப்படுகிறார்.

அரிசிவிலை அதிகரிப்பு

ஒரு கோத்து 23 சதம்

ஜூன் 29

விளம்பரப்பகுதி விடுத்துள்ள ஓர் அறிக்கையின்படி, இன்றுமுதல் அரிசி விலை மூடையொன்றுக்கு ரூ.1 சதம் 20 அல்லது கொத்து ஒன்றுக்கு 1½ சதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. குறித்த அறிக்கையின் விபரம் பின்வருமாறு:-

கையிருப்பிலுள்ள பல ரகங்களின் சராசரி விலைகளுக்கேற்றவாறு நடையிலிருந்து வந்த அரிசி விலை நிர்ணயிக்கப்பட்டது. பொதுவாக விலை குறைவான பர்மா அரிசி ஏராளமாக இருந்து வந்தமையால், இதுவரை இருந்து வந்த விலைகள் சிலகாலம்வரை தொடர்ந்து நடையிலிருந்து வந்தன.

இப்பொழுது பர்மாவிலிருந்து அரிசி "சப்ளை" கிடைக்காமையாலும் இந்திய அரிசிவிலை ஏறுமுகமாக இருப்பதாலும், சராசரி விலையை யுயர்த்த அவசிய மேற்பட்டது.

இறக்குமதி ஏற்றியனுப்புவது முதலிய செலவுகளும், அதிகரித்திருப்பதே விலையை யுயர்த்துவதற்கான மற்றொரு காரணமாகும்.

இதுவரை, அரிசி நஷ்டத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது எனவே, மேற்கூறியவாறு விலையைச் சற்று அதிகரிக்க நேர்ந்தது.

இதன் மூலம் ஓரளவுக்கு நஷ்டம் குறைக்கப்படும்.

கொழும்பு நகரசபைப் பகுதியிற் குறுணைப் பச்சை அரிசி கொத்து ஒன்றுக்கு 18 சதமாகவும் மற்றுஞ் சாதாரண ரகங்கள் கொத்து ஒன்றுக்கு 23 சதமாகவும் விற்பனை செய்யப்படும்.

கொழும்பு நகரில் கோமகன் சுற்றுப்பிரயாணம்

விமான நிலையங்களைப் பார்வையிட்டார்

நேற்று முன்தினம் முழுவதும் மகிமை தங்கிய கிளஸ்டர் கோமகன் எவ்வித ஓய்வுமின்றிக் கொழும்பு நகரின் பல ஸ்தாபனங்களுக்கும் விஜயஞ் செய்தும் பற்பல படைப்பிரிவுகளையும் பார்வையிட்டார். அன்று வெயில் அதிகமில்லாமலும் காலநிலை சாதகமாகவு மிருந்தமையால் கோமகன் தனது சுற்றுப்பிரயாணத்தைக் கஷ்டமின்றி நடத்தக்கூடியதாக விருந்தது.

வழக்கம்போல் அவர் செல்லும் மார்க்கம் பற்றிப் பொதுமக்களுக்கு எவ்வித தகவலும் முன்னதாக அறிவிக்கப்படவில்லையெனினும், அவர் சென்ற வீதிகள் தோறும் ஏராளமான மக்கள் நடைபாதைகளில் திரண்டு நின்றனர். அதிகாலையிலிருந்து, பொலீசார் தெருக்களின் பிரதானமான இடங்களில் நின்று போக்குவரத்தை நிறுத்திக் கோமகனின் சுற்றுப்பிரயாணத்திற்கு வசதிகளை யுண்டுபண்ணினர். பாடசாலைச் சிறுவர்களும் கோஷ்டி கோஷ்டியாக நின்று ஆரவாரத்துடன் கோமகனை வாழ்த்தினர்.

காலையில், கிளஸ்டர் கோமகன் விமான நிலையங்களுக்கு விஜயஞ் செய்தார். அவருடன் விமானப் படையைச் சேர்ந்த வைஸ் மார்ஷல் டி. அல்பியாக்கும் சென்றார். இராணுவ நிலையங்களுக்குக் கோமகன் சென்றபொழுது லெப்டினண்ட் ஜெனரல் ஸேர். ஹென்றி பௌனல் அவரைப் பின்தொடர்ந்தார்.

அடுத்தபடியாக அவர் புகையிரதத் தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்தபொழுது புகையிரத நிர்வாகஸ்தர் மிஸ்டர். டப்ளியூ. ஜி. வில்ஸன் அவருக்கு அறிமுகப் படுத்தப் பட்டார். பின்னர் இலங்கைக் காலாட்படைத் தலைமைக் காரியாலயத்தைக் கோமகன் பார்வையிட்டார். றோயல் இராணுவப்படைப் பிரிவினரின் பயிற்சிப் பாடசாலைக்கு அவர் விஜயம் செய்து அங்கே அதிகசிரத்தை காண்பித்தார்.

பின்னர்க் கோமகன் ஆஸ்பத்திரி 'சப்ளை' நிலையத்தைப் பார்வையிட்டுச் சங்கத்தின் டாப்பில் கையொப்பமிட்டார். சங்கத் தலைவி லேடி கல்டிகொற் அவரை வரவேற்றுப் பல பிரமுகர்களை அவருக் கறிமுகப் படுத்தினர். செல்வி பெற்றி ஓலஸ் ஒரு சோடு நிலக்கால் மேஜை கோமகனுக்கு உபகாரமாக வழங்கினர். அரச விருந்தினர் சங்கத்தின் வேலையை மிகப் பாராட்டினர். கோமகன் ஆஸ்பத்திரியொன்றுக்குப் போயிருந்தபொழுது 'வார்டு'களைச் சுற்றிப் பார்த்தார்.

சனிக்கிழமை பிற்பகல் விமான எதிர்ப்புப் பீரங்கி ஸ்தலங்களையும் கரையோரப் பீரங்கி ஸ்தலங்களையும் இலங்கைப் பாதுகாப்புப்படைப் பிரிவையும் இந்தியத் துருப்புகளையும் லெப்டினண்ட் ஜெனரல் ஸேர். ஹென்றி பௌனலுடன் கோமகன் பார்வையிட்டார். ஆங்காங்கு சில உத்தியோகஸ்தரைக் கண்டு கோமகன் புன்முறுவலுடன் சம்பாஷித்தார்.

தொழிலாளர் படைப் பிரிவு காரியாலயத்திற்கு விஜயம்

மாலை 5 மணிக்கு மகிமைதங்கிய கோமகன் மிஸ்டர் ஓ. ஈ. குணதிலகாவுடன் தொழிலாளர் படைப் பிரிவுக் காரியாலயத்திற்கு விஜயம் செய்தபொழுது போக்குவரத்து மந்திரி அவரை வரவேற்றார். ஒரு மணி நேரத்திற்கு முன்னர்ப் பிரதம தளகர்த்தரும் மேன்மைதங்கிய தேசாதிபதியும் அங்கே போயிருந்தனர். அத்தியாவசியத் தொழிலாளர் அணிவகுப்பைக் கோமகன் பார்வையிட்டார்.

தொழிலாளர் படைப் பிரிவின் தேகப் பயிற்சி விளையாட்டுகளை அவர் பார்வையிட்டபின், லெப்டினண்ட் கர்ணல் ஜே. எல். கொத்தலாவலையின் வாசஸ்தலத்தில் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. மந்திரிமாருக்கும் யுத்தசபை அங்கத்தினருக்கும் மற்றும் பலருக்கும் பிரியாவிடை கூறிவிட்டுக் கோமகன் கொழும்பு திரும்பினார்.

மஞ்சள்

நிலத்திற்குக்கீழ் வளரும் மஞ்சட் கிழங்கைப் பக்குவப்படுத்திய பின் கறிசமைப்பதற்கு இன்றியமையாத மூலப்பொருளாகும். மஞ்சள்மரம் இரண்டல்லது மூன்றடி உயரமாக வளரும். இதன் இலைகள் அகலமாய் இருக்கும். நிலத்திற்குள் இதனடியிலிருந்து ஒன்றிரண்டு தடித்த மஞ்சட் கிழங்கும் பல மெல்லிய விரல் மஞ்சட் கிழங்கும் உண்டாகும்.

காலமும் நடும் முறையும்

மழை அதிகமான இடங்களில் 2000 அடி உயரமுள்ள இடங்களில் இதை உண்டாக்கலாம். எனினும் வரண்ட தேசத்திலும் நீர்ப்பாய்ச்சலும் நல்ல பசளையும் உள்ள தோட்டங்களில் இதை நன்றாய் உண்டாக்கலாம். இதைப் பங்குனி சித்திரை மாதங்களிற்றான் உண்டாக்கவேண்டும். நிலத்தை ஐந்தடி அகலமான பாத்திகளாகவும் இடையில் ஒரு அடி அகலமான வாய்க்கால்கள் உள்ளதாகவும் நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ளதாய் அமைத்துக்கொள்ளவேண்டும். விரல் மஞ்சளையும் தாய்மஞ்சளையும் நடலாம். ஆனாலும் நல்ல விரல் மஞ்சளையே நடுவதே உத்தமம். உரமில்லாத மண்ணில் ஒரு அடி இடைவெளி விட்டும் உரமுள்ள மண்ணில் ஒரு அடி இடைவெளிவிட்டும் நடலாம். நட்டபின்னர் வைக்கோலைப் போட்டுக் களை வளரவிடாமல் ஈரப்பசை தங்கவிடவும் மூடிவைக்க வேண்டும்.

விளைவைச் சேர்த்தல்

இலைகள் மஞ்சள் நிறமாய்மாறி வாடத்தொடங்கினவுடன் மஞ்சளைக் கிண்டி எடுக்கலாம். இதற்கு 10 மாத காலத்திற்குப்பின் தை மாசி மாசங்களில் வசதிப்படும். கிழங்கை எடுத்தபின் அதிலிருக்கும் வேர்களையும் மண்ணையும் நீக்கிவிட்டுப் பிறகு விரல் மஞ்சளையும் தாய் மஞ்சளையும் வேறாகப் பிரிக்க வேண்டும். அப்போது திறமான விரல் மஞ்சளைத் தெரிந்தெடுத்து மறுமுறை நடுவதற்காக வைத்துக் கொள்ளவேண்டும்.

மஞ்சளைப் பக்குவப்படுத்துதல்

தாய்மஞ்சளைப் பலதுண்டுகளாக வெட்டி விரல் மஞ்சளோடு கலந்து அதை ஒரு பாத்திரத்தில் போட்டு மஞ்சளின் அளவுக்குத் தண்ணீர் ஊற்றி, பாத்திரத்தின் மீதியான பாகத்திற்கு மஞ்சளின் இலைகளையும் காம்புகளையும்போட்டு நன்றாய் மூடிவிட்டு சுமார் மூன்று மணிநேரமாகச் சிறுநெருப்புப்போட்டு அவித்துப் பின்னர்க் குளிரவைத்துப் பிறகு வெளியில் எடுத்து ஒருவாரகாலம்வரை வெய்யிலில் பரப்பிக் காயவைக்கவேண்டும். நன்றாய்க் காய்ந்தபின்பு கோணிப்பைகளில் போட்டு அதோடு கூர்மையான கல்துண்டுகளையும்போட்டுக் குலுக்க வேண்டும். இப்படிச் செய்வதால் மஞ்சள் துப்பரவாக்கப்பட்டு, பளபளப்பாயும் மஞ்சள் நிறமாயும் காணப்படும்.

ஓர் ஏக்கருக்கு 90 முதல் 150 அந்தர்வரை பச்சை மஞ்சள் விளையும். இது 9 முதல் 15 மடங்கு அதிகமான பலன் தருவதாகும். இதைக் காயவைத்தால் 18 முதல் 30 அந்தர்வரை பாரமுள்ளதாகும். அதாவது பச்சை மஞ்சளிலிருந்து பக்குவம் செய்யப்பட்ட மஞ்சள் ஐந்திலொரு பங்காகும்.

அப்பய்ய தீக்ஷிதர் வரலாறு.

[ஆசிரியர் க வை. ஆத்மநாதசர்மா]

(முற்றொடர்)

தீக்ஷிதர் பெருமானவர்கள் நிறைவேற்றிய வாஜபேய யாகத்தின் பெருமை எங்கும் பரவலாயிற்று. இவ்வரலாற்றை யறிந்த அரசருள் ஒருவனாகிய வேலூர் சின்னப்பொம்மன் என்பவன் தனது மந்திரிமார் சிலருடைய துர்ப்போதனையால் யாகத்துக்கு வந்திலன். யாகத்தில் நிகழ்ந்த புதுமைகளைக் கேட்ட மாத்திரத்தே தனது செய்கையையிட்டுப் பச்சாதாபப்பட்டான். தான்செய்த பிழைக்குப் பரிகாரமாகத் தீக்ஷிதரவர்களை எவ்விதத்திலும் தனது மாளிகைக்கு வரவழைத்து அவரது அருளைப்பெற நினைந்தான். பல உபசாரப் பொருள்களோடு சில முதியோர்களைத் தீக்ஷிதரவர்களிடம் அனுப்பித் தான் செய்த தவற்றைப் பொறுத்துக்கொண்டு தனது மனைக்கு எழுந்தருளக் கருணைபுரிய வேண்டுமெனப் பணிவாகக் கேட்டுக் கொண்டான்.

அறிவு, அருள், ஆற்றல், தெய்வீகம் முதலியன வாய்க்கப்பெற்ற பெரியாராதலால் தீக்ஷிதரவர்கள் அரசனது வேண்டுகோளுக்கு இசைந்தார்; அரசனது வரிசைகளோடு புறப்பட்டுச் சீடர்கள் பலர் சூழ வேலூரை யடைந்தார். அதனையறிந்த சின்னப்பொம்மராஜனும் அரசாங்க மரியாதைகளுடனே அவரை எதிர்சென்று வணங்கி யழைத்துக்கொண்டு தனது மாளிகையை யடைந்தான்; அவருக்குச் செய்யவேண்டிய பாத பூஜைகளை அன்போடு நிறைவேற்றினன்; அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்துநின்று பின்வருமாறு விண்ணப்பித்துக்கொண்டான். "மகாதபோதனரே! தங்களைக் கண்டவுடனே சூரியனைக் கண்ட விருள்போல எனது அபிமானம் நீங்கிற்று. சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராக்ஷத்துவேஷிகள் சிலர் என்னை வஞ்சித்து ஏராளமான பொருளையும் பெற்றனர், என்னையும் சிவாபராதத்துக்கு ஆளாக்கினர். தங்களுடைய தரிசனத்தினால் எனது பாபம் நீங்கிற்று. தாங்கள் தயை கூர்ந்து என்னையும் சீடனாக்கிச் சிவதருமங்களையும் சிவமகிமைகளையும் தெருட்டியருள வேண்டும் எனவேண்டிக் கொண்டான்.

தீக்ஷிதரவர்கள் கருணை நிரம்பிய தமது கண்களால் அவனை ஒருமுறை பார்த்து அநுக்கிரகம் செய்தார்கள். அரசன் அவருக்கெனவளித்துள்ள மாளிகையிற்றானே சிலகாலந் தங்கியிருந்தார்கள். அங்கும் அவர் தமது நித்தியகடன்களாகிய சிவாராதனம், அக்னிஹோத்திரஞ் செய்தல் முதலியவற்றோடு சிவமகிமைகளையெல்லாம் புராணங்களை ஆதாரமாகக்கொண்டு பிரசங்கித்து வந்தார்கள்.

அபிசாரகரத்தைப் போக்கியமை

சின்னப்பொம்ம ராஜனுக்கு தீக்ஷிதரவர்களிடம் பக்திமேலிடவே, அதனைக்கண்டு மனம் பொறுக்காத சில வஞ்சகர்கள் திரண்டு அபிசார ஓமஞ்செய்து அரசனது அந்தப்புர மகளிர்களையும் சிவபக்தர்களையும் பிடிக்குமாறு கொடிய சுரநோயை ஏவிவிட்டனர். அந்தச் சுரமோ அவுஷதப் பிரயோகத்துக்கு அடங்காது மேலோங்கிற்று. அதனைக்கண்டு சகிக்கமாட்டாமல் அரசன் தீக்ஷிதரவர்களிடம் முறையிட்டான். அவர்கள் அவனுக்கு அபயங்கொடுத்துக் காலாக்கினி ருத்திரனான சிவபெருமானைத் தியானித்த அறுகம்புல், வில்வம், நெற்பொரி, பசுநெய் முதலியவற்றைக் கொண்டு சிவாக்கினியில் ஓமஞ்செய்தார்கள். உடனே அங்குள்ள யாவரும் சுரநோய் நீங்கப்பெற்றுத் தீக்ஷிதரவர்களை வந்து வணங்கினர்கள். அரசனும் அப்பெரியாரது மகிமையை நினைந்து உளம் பூரித்தான்.

சில வஞ்சகர் குட்டரோகியானமை

பின்னும் சில துரோகிகள் தீக்ஷிதரவர்களுக்கே இடையூறு செய்யத் தலைப்பட்டார்கள். ஒருநாள் தீக்ஷிதரவர்கள் சிவ வழிபாட்டிற்காகப் பூஜாக்கிரகத்துக்குச் சென்றார்கள். அங்கே ஏதோ வஞ்சகச் சூழ்ச்சியால் எலும்பு, இரத்தம், இறைச்சி என்பன சிந்திக்கிடப்பதைக் கண்டு அங்கேயிருந்தே நின்றபடி சில வேதமந்திரங்களை உச்சரித்தார்கள். உடனே அந்த இடம் முன்போலத் தூயதாகக் காணப்பட்டது. அரசனை அடுத்துக் கெடுக்கும் கபவஞ்சகர்களாகிய அந்த விஷமிகளுடைய வீடுகளிலெல்லாம் அப்பொருள்கள் நிறைந்து அவர்களுக்குத் துன்பந் தருவனவாயின. அவ்வளவோடமையாமல், அச்செயலைச் செய்தவர்களாவரும் குட்டரோகிகளாயினர். இப்புதுமைகளை அறிந்தவர்கள் யாவரும் தீக்ஷிதர் பெருமானவர்களைச் சிவபரம்பொருளாகவே மதித்து வணங்கத் தலைப்பட்டார்கள்.

விஷமிட்ட தீர்த்தத்தைப் பருகியமை

அந்தக்காலத்தில் நாவுக்கரசர் பெருமானுக்குச்சமணர்கள்எவ்வாறு மேலும்மேலுந்தீங்கிழைத்தார்களோ அவ்வாறே அப்பய்ய தீக்ஷிதரவர்களுக்கும் சின்னப்பொம்ம ராஜனுடைய மந்திரிகள் சிலரையுள்ளிட்ட வஞ்சகர்கள் மேலும் மேலும் இடர் விளைப்பாராயினர். அவர்களுள் தாத்தாசாரியார் என்பவரும் ஒருவர். சிவவிஷ்ணு வழிபாட்டைப் பேதமின்றித் தினமும் செய்து வருவது தீக்ஷிதரவர்களுடைய வழக்கம். அந்தத் தாத்தாசாரியார் விஷ்ணுகோவில் அர்ச்சகரிடம் ஒரு காள நஞ்சைத் தீர்த்தத்துடன் கலந்து தீக்ஷிதரவர்களுக்குக் கொடுக்குமாறு ஒழுங்கு செய்திருந்தார்.

மகாவியதிபாதம்பொருந்திய ஒரு புண்ணியதினத்திலே தீக்ஷிதரவர்கள் சிவதரிசனஞ் செய்துகொண்டு விஷ்ணுவாலயஞ்சென்றார். அங்கும் தரிசனம் முடித்தபின் வழமைபோலத் தீர்த்தப்பிரசாதத்தை ஏற்கும்படி நின்றார். பிரசாதத்தை வழங்கும் அர்ச்சகர் சிறிது தயக்கத்துடன் வந்து அவரையறியாமலே கைகள் நடுங்க, தீர்த்தத்தை வழங்காது முன்னே நின்றார். "தாமசகுண மேலீட்டாற் பொருளாசை காரணமாகப் பாவச் செயலைச் செய்யத் துணிந்தாலும், சத்துவ குணம் வரும்போது மனச்சாட்சி உண்மையை வெளிப்படுத்துமன்றோ!" தீக்ஷிதரவர்கள் அக் கபடத்தை அறிந்துகொண்டும் அதனைப் பொருட்படுத்தாமல் அர்ச்சகரைப் பார்த்து "தயக்கமேன்? நடப்பது நடக்கும். தீர்த்தத்தை வழங்கலாமே" என்று கையை நீட்டி வாங்கிக்கொண்டு ஆலகால விஷத்தை யுண்டருளிய திருநீலகண்டராகிய பெருமானைத் தியானித்தார்.

"கவியுமல்லேன், முனிவனுமல்லேன், தேவசாதியுமல்லேன், எங்கும் வியாபியான சிவபரம்பொருளையன்றி வேறொன்றையு மறியேன், அமிர்தமும் விஷமும் ஏனைய பொருள் யாவும் அப் பரம்பொருளிடமிருந்து தோற்றியவையன்றோ! ஆதலின் இந்த விஷதீர்த்தம்என்னை என் செய்யும்" என்ற கருத்தமைந்த ஒரு செய்யுளைக் கூறிக்கொண்டு அதனைப் பருகினார். அதனைக் கண்டவர்கள் அந்தோ! அபாயம் நேர்ந்ததே என்று ஏங்கினர். ஆனால் தீக்ஷிதரவர்கள் யாதொரு மாறுபாடுமின்றித் தமதில்லஞ் சென்று சுகமாகவே இருந்தார்கள். கடவுளை

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானு ஹு
ஆனிமீ கஅ வ வியாழக்கிழமை

எகிப்து நாட்டில் யுத்தம்

ரொப்ருெக் யுத்தத்தில் வெற்றிபெற்றவுடன் ஜர்மனிய சேனுபதியாகிய ரொம்மெல் தம் சைனியத்தோடும் யுத்த உபகரணங்களோடும் எகிப்து நாட்டிற்குப் படையெடுத்துச் சென்றவிடத்து எங்கள் பிருத்தானிய சைனியத்திற்கும் ஜர்மனிய சைனியத்திற்குமிடையே கோரமான யுத்தம் நடக்கலாயிற்று. ஆனல் இந்த யுத்தத்தில் ஒரு கவலைக்கிடமான செய்தி யென்னை யெனில், இந்த யுத்தத்திலே எவ்விதத்திலும் தாங்கள் சம்பந்தப்படப் போவதில்லை யென்று எகிப்திய பிரதம மந்திரி தெரிவித்துவிட்டார். ஆனதால் எங்கள் பிருத்தானியர், எகிப்திய அரசினரின் துணையின்றிப் பகைவருடன் யுத்தஞ் செய்ய வேண்டியதாயிற்று. இதற்கிடையில் பாதுகாப்பற்ற, அற்றுக்கணக்கான மைல்கொண்ட வனாந்தரங்களையெல்லாம் கடந்து ரொம்மெலின் சைனியம் எகிப்துநாட்டின் பிரதான பட்டினங்களாகிய அலெய்ச்சாண்டிறியா, கெயிரோ என்னுந் தானங்களை நோக்கி வருகின்றதாம்; மேலே சொல்லப்பட்ட இரு பட்டினங்களையும் பகைவர் தாக்கிச் சமர்புரிந்து அநுகூலமடைவரேல் சுவெஸ்கால்வாயின் நிலைமை சஞ்சலமாகுமென அஞ்சக்கிடக்கின்றது.

ஆனல் இந்த நேரத்தில் எகிப்து நாட்டின் விஷயத்திலே பிருத்தானியர் முதலிய ஐக்கிய ராச்சியத்தினர் பகைவர்களுடைய தாக்கத்தை எதிர்த்து அவர்களைப் புறங்காணுதற்காகிய சகல ஆயத்தங்களோடும் நிற்கின்றனரெனத் தெரிவிக்கப்படுகின்றது; போதிய உணவுப் பொருளையும் தண்ணீரையும் தருவிக்கக்கூடிய புகைரதத் தொடர்புள்ள தானத்திலேயே ஐக்கிய ராச்சியத்தினர் நிர்வகித்து நிற்கின்றனர். இனி ஜர்மனியர் விஷயத்தில் இப்பொழுது யுத்தம் நடக்குமிடத்திற்கும்ரொப்ருெக்குக்கு மிடையேயுள்ள தூரம் 200 மைலாகும். அவர்கள்வச முள்ளதாகிய பென்காசிக்கும் எகிப்திய யுத்த முனைக்கு மிடையேயுள்ள தூரம் 400 மைலாகும். இவ்வளவு தூரங்களிலிருந்தே பகைவர்கட்குப் படையும் யுத்த உபகரணங்களும் வந்து சேரவேண்டியிருக்கின்றன. ஆனாலும், இதற்கு முந்தி நடந்த வனாந்தர யுத்தங்களை நினைக்கும்போது ரொம்மேலுக்கு தூரமும் வனாந்தர யுத்தமும் பெருந்தடைகளாகக் காணப்படா எனச் சொல்லவேண்டியிருக்கின்றது. ரொம்மெல் ரொப்ருெக் யுத்தத்தை முடித்துக்கொண்டு எகிப்துநாட்டுட் பிரவேசித்தமை மிகவும் துரிதமான செயலாகும்.

இப்படி யெல்லா மிருந்தாலும் எங்கள் பிருத்தானிய முதன் மந்திரியாகிய மிஸ்டர். ஷேர்ஜில் சில நாட்களின்முன் உவாஷிங்ரனில் நடந்த மகாநாட்டில் "எகிப்துநாட்டைநாங்கள் ஒருபோதும் கைவிடப் போவதில்லை" என உறுதியோடு தெரிவிக்கிருர். ஆனதால் நாங்கள் எகிப்து நாட்டில் நடக்கும் யுத்தத்தைப் பற்றி ஏங்கவேண்டியதில்லையாம்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்)

"கும்பிடப்போனதெய்வம் குறுக்கிட்டாற் போல்"

"அது சரி, இனிமேல் நான் இந்தக் கருமத்தைவிட்டு ஒருபோதும் பேசப்போவதில்லை; நீயும் உன் மகனும் யோசித்து நடக்கவேண்டியபடி நடந்துகொள்ளுங்கள்" என்று சிறிது வெறுப்புடன் சொன்னர் சிதம்பரப்பிள்ளை. "ஏன் அப்படி எறிந்து பேசுகிறீர்கள்; காலநேரம் வந்தால் எல்லாம் தானகவே கைகூடும்; நானும் நீங்களும் நினைக்கிறபடி எல்லாம் நடக்குமா" என்று சமாதானஞ் சொன்னள் சிவகாமித்தாய். பின்னருஞ் சற்று நேரம் இருந்து யோசித்துவிட்டு அந்த இடத்தை விட்டுப் போய்விட்டார் சிதம்பரப்பிள்ளை அவர் இப்படியெல்லாஞ் சொன்னரெனினும், முருகர் பேசிவந்த பெண்ணையும் சீதனத்தையும்விட அவருக்கு எள்ளளவும் மனமில்லை. பெண்ணசை பொன்னசை கொண்டார் உள்ளத்தை மாற்றுவது இலேசான கருமமல்ல என்று உலகத்திலே சொல்லுவார்களல்லவா. அங்ஙனமானுற் பொன்னசை கொண்ட சிதம்பரப் பிள்ளையின் உள்ளம் இந்த விஷயத்தில் உறங்கிக் கிடக்குமா? அவர் அடுத்தநாட் பின்னேரம் ஏதோ கருமார்த்தமாகத் தமது வீட்டிலிருந்து புறப்பட்டுப் போகும் மார்க்கத்தில் முருகர் எதிர்ப்பட்டார், அவரைக்கண்ட சிதம்பரப்பிள்ளை "அண்ணே, என்ன இன்றைக்கு இந்தப் பக்கம்" என்று வினவுதலும் "வேறொன்றுமில்லை, அம்மான், உங்களைத்தான் ஒருகால் பார்த்துப் போகலாமென்று வருகிறேன்; நீங்களும் எங்கோபுறப்பட்டுப் போகிறீர்கள்போலிருக்கிறது" என்று வினயமாக முருகர் சொல்லுதலும் "இல்லை அம்மான், அப்படி ஆவசியமாக கருமமொன்றுமில்லை; என்னிடம்தான் நீங்கள் வந்ததென்ருல், வாருங்கள் பேசிப்பேசி வயல் வெளிக்குப் போய்விட்டு மீண்டு வீட்டிற்கு வருவோம்" என்ருர் சிதம்பரப்பிள்ளை; "அதற்கென்ன தம்பி, அப்படியானல் நூறுமுறையும் எனக்குச் சந்தோஷம்" என்று சொல்லிவிட்டு முருகரும் சிதம்பரப்பிள்ளையுடன் கூடிக்கொண்டு போனர். "நெருக்கிக் கேட்கிறேன் என்று எண்ணக்கூடாது, உங்களுடைய நன்மையையிட்டுத்தான் நான்பாடுபடுகிறேன்; நான்பேசின அந்தக் கருமத்தைப்பற்றி உங்கள் அம்மாளோடு பிள்ளையோடு ஏதும் யோசித்தீர்களோ" என்று மெல்லக் கேட்டார் முருகர். "ஓம், அம்மான், இராப்பகலாக எனக்கு அதுவே சிந்தனை; இப்பொழுதும் அதைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டு வரும் மார்க்கத்தில் நீங்களும் வந்தீர்கள்; உங்கள் வரவு கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போலிருக்கிறது; எனக்கு மாத்திரமல்ல என் வீட்டுக்காரருக்கும் அவன் தம்பிக்கும் இந்தச் சம்பந்தம் சம்மதந்தான்; ஆனல், மகன் இன்னமும் படிக்கவேணும் படிப்பை இடையிற் குழப்பிவிடவொண்ணுது, இன்னுங் கொஞ்சக் காலம் போகட்டுமென்பது தாயின் எண்ணம்; இப்பொழுது கலியாணஞ் செய்வதற்கு என்ன ஆவசியகம், இன்னும் படித்து ஏதும் உத்தியோகத்திலே சேர்த்தபிறகுதான் கல்யாணத்தைப்பற்றி ஏதும் யோசிக்கவேண்டுமென்பது மகனுடைய நோக்கம்; ஆனல் எனக்கு இன்றைக்குஞ் செய்யப் பிரியந்தான்" என்ருர் சிதம்பரப்பிள்ளை. இதனைக்கேட்ட முருகர் சிரித்துக்கொண்டு "நீங்கள் சொல்லுவது முழுவதுஞ் சரி தம்பி, ஆனல் நீங்கள் மாப்பிள்ளையாக விருந்தாலல்லவோ இன்றைக்குஞ் செய்யலாம்; இந்த விஷயத்தில் உங்கள் மகனே மாப்பிள்ளையாக இருக்கிறபடியால் அவருடைய விருப்பமில்லாமல், தாயுடைய சம்மதமில்லாமல், இன்றைக்குச் செய்வதெப்படி? இன்னும் பத்துவருடங் கழிந்தபிறகுதான் செய்வதெப்படி? இது நிறைவேறப் போகிற கருமம்போல் எனக்குப் புலப்படவில்லை" என்று முருகர் சொன்னர். "இல்லை அம்மான், அப்படிச்சொல்லக்கூடாது; நான் என் மனைவியையும் மகனையும் கூடிய சீக்கிரத்தில் என் வழிக்குக் கொண்டு வருவேன்; அதையிட்டு யோசிக்கவேண்டாம்; ஆனல் உங்களை ஒன்று மாத்திரம் கேட்கிறேன்; அந்தப்பெண் நீங்கள் சொன்ன இலட்சணமெல்லாம் உடையவள்தானே, சங்கீதத்தில் நிபுணைதானே, இவை உண்மையாக இருந்தால் அந்தப்பெண்ணைக் காட்டியாயினும் என் மகன் மனத்தை "வசைத்து"ச் சம்மதிக்கச் செய்யலாம்; அந்த விஷயத்தில் அம்மான் நீங்கள் எனக்குச் சிறிது உதவி செய்ய வேணும்" என்று சிதம்பரப்பிள்ளை ஆவலுடன் வினவினர்.

இந்தப்பெண்ணைக்கண்டவர் எருமை மேய்க்கப் போவரோ?

"தம்பி, என் பேச்சில் நீர் ஒருபோதும் சந்தேகப்படக் கூடாது; நான் தான் பொய் சொல்ல நினைத்தாலும் என் நாக்கு அதற்கு இடங்கொடாது; ஏன்? என் நாவிற்குப் பொய் சொல்லும் பழக்கமேயில்லை; அந்தப் பெண்ணிடத்தில் பொழுதும் சங்கீதஞானமும் நான் உங்களுக்கு முந்திச் சொன்னதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமென்னலாம்; அவைகளை நேரிற் பார்த்தால், நேரிற் கேட்டாற்ருன் உங்களுக்கு விளங்கும், நான் இரண்டொரு முறை அந்தப் பிள்ளை பாடக் கேட்டிருக்கிறேன்; ஆசுத்தமான பாட்டு; உங்கள்மகன் அப்பெண்ணைக் கண்டால், இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமை மேய்க்கப் போவரோ, என்ற விதமாக அவன் பள்ளிக்கூடத்திற்கும் போகாமல் விட்டுவிடுவான்; அப்படியல்லவென்று போனுலும் அவன் மனம் படிப்பிலே செல்லாது; இனி அந்தப்பிள்ளை வாய் திறந்து பாடினுல் பட்டமரங்களும் தளிர்க்கும். தம்பி, இப்பொழுது நான் வயசுபோய் இப்படி யிளைத்திருந்தாலும் அந்த நாட்களில் எனக்கும் சங்கீதம் கல்லாய் வரும்; பாட்டுக்கார முருகரென்றும் எனக்கு அந்த நாளில் ஒருபேர் இருந்தது; என்றைக்கு என் பல்லுப் போனதோ அன்றைக்கே என் சொல்லுப் போய் விட்டது; அந்தப்பிள்ளை சங்கீத முறையிற் சொல்லப்பட்ட இலக்கணங்களோடு இருந்து பாடவல்லவள்; சங்கீதப் படிப்பித்தற்காகத் தகப்பனும் அதிகபொருளைத் தன் மகளையிட்டுச் செலவழித்திருக்கிறர்; சங்கீதம் பாடுபவருக்குரிய இலக்கணங்களைப்பற்றிப் பாடப்பட்ட பாட்டொன்று எனக்கு ஞாபகமாயிருக்கிறது; அந்தப் பாட்டிலே சொல்லப்பட்ட இலட்சணங்களெல்லாம் அந்தப் பிள்ளையிலே அமைந்திருக்கிறது. அந்தப் பாட்டைப் படிக்கிறேன், தம்பி கேளும்" என்று சொல்லி முருகர் பின்வருமாறு படிப்பாராயினர்:-

"புருவம் நெரியாமல் மணியெயிறு தோன்றாமல் விழி
புரளாமல் அங்க சேட்டை
புரியாமல் மிகதலையை யசையாமல் மிடறுதான
பொருமிவிம் மாமல் இயல்பாய்ச்
சருதிலய சுரஞானநீதியொடு வீணையின்
தொனியில்லா தப்பிரமமாய்த்
துய்யதத் திரியோசை யிடறேசையென வேறு
தோன்றாமல் இன்ப மயமாய்த்
தருமதர அமுதரசம் ஒழுகுசா ஷிகள் பழகு
சங்கீத வித்தை யென்றல்
சகலர்க்கும் ஆரத்த மாதம்புது பாடுமவன்
சரசகுண வஞ்சி யெனிலோ
மருவிமனம் உருகி யணையாமல் உயிர் உய்யுமோ
மணவாள நாராயணன்
மனநிறைறை யசர்மேலும் மங்கைமணவாளனே
வரத வேங்கட ராயனே"

தம்பி அந்தப்பிள்ளை பாடினல் இந்தப் பாட்டிலே சொல்லப்பட்ட விதமாகத்தான் இருக்கும்; இன்னுமொன்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; வருகிற சனிக்கிழமை அந்தப்பிள்ளை படிக்கும் பள்ளிக்கூடத்திலே இரவு 6½ மணி தொடக்கமாக ஒரு பாட்டுக்கச்சேரி நடக்கும்; அதில் நான் சொன்ன இந்தப் பிள்ளையும் பங்குபற்றுவாளென்று கேள்விப்பட்டேன்; ஆனதால் அந்த நேரத்தில் நீர் உம்முடைய சமுசாரம், உங்கள் மகன் மகள் எல்லாரும் தவருமல் வந்து பாருங்கள் கேளுங்கள்; அதன் பிறகு இந்தக் கல்யாணப்பேச்சு விஷயத்தில் எனக்கு அதிக சங்கடம் இராது" என்று சொல்லி முடித்தார் முருகர். இவைகளைக் கேட்ட சிதம்பரப்பிள்ளைக்கு உண்டான ஆனந்தத்திற்கு ஒரு எல்லையில்லையென்னலாம்; "அம்மான், நல்லாய்ச் சொன்னீர்கள்; நான் எதுவிதத்திலும் என் குடும்பத்தோடு அங்கே போய்ச் சேருவேன்; நீங்களும் தயவுசெய்து அந்த நேரத்தில் அங்கே தவருமல் வரவேண்டும்" என்று அவர் சொல்லுதலும், "தம்பி, நானு வராமல் விடுபவன்; நான் உங்களுக்கு முந்தியே அங்கே வந்து சேருவேன்" என்று சொல்லி முருகர் விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுத் தான் போகவேண்டிய இடத்திற்குப் போனர். சிதம்பரப்பிள்ளையும் தம்வீட்டிற்கு மீண்டார்.

'நெஞ்சை யொழிந்தொரு வஞ்சகமில்லை'

இவ்வண்ணமாக, குறித்த சனிக்கிழமையன்று காலை, குமாரசுவாமி வழக்கம்போற் சுந்தரேசவரன் வீட்டிலிருந்து அவனுக்குப்பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும் போது அவனுடைய மனம் அன்று படிப்பிற் செல்லாதிருந்ததையும், அவன் கவலைபோடிருந்ததையும் குமாரசுவாமி அவதானித்தான். ஒருபோதும் இப்படியிராத சுந்தரேசவரன் இன்றைக்கு இப்படியிருக்கிறானே, இதன் காரணமென்னவென்று எனக்குப் புலப்படவில்லையே; நான் இவனுக்கு ஏதும் பிழை செய்து விட்டேனோ, என் மீது ஏதும் மனஸ்தாபமோ" என்று பலவாறு யோசித்துக் கொண்டு குமாரசுவாமி சுந்தரேசவரனைப் பார்த்து "தம்பி, உமக்கு ஏதும் சுகவீனமோ" என்று பரிவுடன் வினவ, "இல்லை அண்ணே, இன்றைக்கு எனக்கு அதிக அலுப்பாயிருக்கிறது, அதனாற்றான் படிப்பிலே மனஞ் செல்லவில்லை" என அவனுக்குப் பதில் சொல்லிவிட்டுத் தன தங்கையைக் கூப்பிட அவள் "என்ன அண்ணு" என்று கேட்டுக் கொண்டு அங்கே வந்தாள் "தங்கச்சி, எனக்கு இப்பொழுது அதிக அலுப்பாயிருக்கிறது; நீ ஏதும் படிக்க வேண்டியிருந்தால் அண்ணுவிடம் கேட்டுப் "படி" யென்று சொல்லிவிட்டுச் சுந்தரேசவரன் சும்மாவிருந்தான்; அப்படியே சுந்தரேசுவரி போய்த் தன் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்து தனக்குள்ள சந்தேகங்களைக் குமாரசுவாமியிடம் கேட்க அவன் மாமியாருடைய கேள்விக்குப் பதில் சொல்லும் மருமகன் போல், அவள் கேட்ட சந்தேகங்களுக்கெல்லாம் தலைகுனிந்தபடியே விடைசொல்லிக் கொண்டிருந்தான்; சுந்தரேசுவரி குமாரசுவாமியிடம் படிக்கும்போது யாரும் பார்த்தால், அப்படிப் பார்ப்பவர்களுக்குச் சிரிப்புண்டாகும்; அவள் சிரித்தபடி பலமுறை அவன் முகத்தைப் பார்த்துக் கேள்வி கேட்டாலும் அவன் அவளுடைய முகத்தை நிமிர்ந்து பார்த்துப் பதில் சொல்லான். சுந்தரேசுவரி படித்து முடித்தபின், குமாரசுவாமி தன் வீட்டிற்குப் போகப் புறப்பட, சுந்தரேசவரனும் உடன் புறப்பட்டான்; அப்பொழுது குமாரசுவாமி அவனைப் பார்த்து "தம்பி, நீர் இந்த வெயிலில் என்னுடன் வரவேண்டாம்; நீர் அலுப்புப்படுகிறீர்; சற்று ஆறியிரும், நான் போய் வருகிறேன்" என்று குமாரசுவாமி சொல்லித் தடுக்கவும் அப்படியல்லவென்று சொல்லிச் சுந்தரேசவரனும் உடன் புறப்பட்டான். இருவருங் கூடிக் கொண்டு போகும்போது குமாரசுவாமி சுந்தரேசவரனைப் பார்த்து "தம்பி, நீர் இன்றைக்குத் துக்கமயமாகவே காணப்படுகிறீர்; காரணத்தைக் கேட்கச் சொல்லுகிறீரில்லை; நீர் கவலைபோடிருப்பது எனக்குங் கவலையை விளைக்கிறது; எனக்குச் சொல்லக்கூடாத இரகசியமும் ஏதுமுண்டோ" என்று அன்புடன் கேட்டான். சுந்தரேசவரன் நெட்டுயிர்த்து "அண்ணே, உங்களுக்கு நான் ஒன்றையும் ஒளிக்கமாட்டேனே; எனக்கு வேறு எவ்வகையான கவலையுமில்லை; என் தகப்பனர் சில நாட்களாக எனக்குக் கல்யாணம் பேசத் தொடங்கியிருக்கிறர்; எனக்கென்ன இப்போது கலியாணம்? இதனுல் என் படிப்புக் குழம்புகின்றது; இப்பொழுது கலியாணம் செய்யும் நோக்கம் எனக்குக் கனவிலுமில்லை; அதற்கெல்லாம் காலநேரமுண்டு; பிறகு தான் செய்வதாயிருந்தாலும் என் எண்ணத்திற்கு நான் கலியாணஞ் செய்து கொள்ளுகிறவனே யொழிய என் தகப்பனுர் சீதனத்திற்கு ஆசைப்பட்டுப் பெண் பேசி வந்தால் நான் அதனை ஒருபோதுஞ் செய்யப் போவதில்லை; என் அண்ணே நெஞ்சை யொழிந்தொரு வஞ்சகமில்லையென்றபடி, உங்களுக்கு உள்ளதைச் சொல்லி விடுகிறேன், உங்களெல்லாருக்கும் விருப்பமாயிருந்தால் உங்கள் சகோதரி கமலத்தைக் கலியாணஞ் செய்வது தான் எனக்கு முழு விருப்பம்" என்று உறுதியோடு சொன்னன் சுந்தரேசவரன். இதனைக் கேட்ட குமாரசுவாமி திடுக்குற்றுன்; ஏன்? அவன் இப்படிச் சொல்லுவானென்று இவன் ஒருபோதும் நினைத்திருந்ததில்லை; பின்னர் இருவரும் தத்தம் வீட்டிற்கு மீண்டனர்.

(வரும்)

பிருத்தானியர் வெளியேறுவது பற்றிக் காந்திஜி

'ஹரிசன்' பத்திரிகையில் எழுதிய கட்டுரை

ஆமதாபாத், ஜூன் 30—

இந்தியாவிலிருந்து பிருத்தானியர் வெளியேற வேண்டுமென்ற கோரிக்கையை நன்கு விளங்கிக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்களுக்கு மகாத்மாகாந்தி "ஹரிஜனி"ல் பதிலளிக்கும்போது கூறியதாவது:—

நேசதேசங்களுக்குத் தோல்வியைக் கொடுக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளும்படி நேசதேசங்களை நான் தூண்டமாட்டேன். ஜப்பானியரை உள்ளே விடாமற் பலாத்காரமற்ற முறையினுல் தடுத்துவிட முடியுமென்று என்னுல் உறுதியளிக்க முடியாது. இந்தியாவிலிருந்து நிபந்தனையின்றிப் பிருத்தானியர் வெளியேறுவார்களேயானல், அதனுல் சீனுவிற்குத் தோல்வியும் இந்தியாவிற்கு ஜப்பானிய ஆக்கிரமிப்பும் ஏற்படலாம். ஆயின், என்னுடைய கோரிக்கையின் பலனுக இவ்வித ஆபத்துக்களெதுவும் சேருமென்று நான் நம்பவில்லை. என்னுடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படாமல் இந்தியாவை ஜப்பானியரின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு நேசதேசங்கள் இந்தியாவில் தங்க வேண்டுமென்ற அவசியம் ஏற்படும்பொழுது இந்திய தேசீய அரசாங்கம் [illegible] இந்தியாவில் இருக்கவிடலாமென்று நான் கருதுகிறேன்.

[illegible] ஜனநாயகம் பேச்சுரிமை தனிப்பட்டவரின் சுதந்திரம் என்றெல்லாம் கூறும் அறிக்கைகளின் விளைவுகளை நன்கு ஆராய்ந்து பார்க்க இந்தியாவிற்கு உரிமையிருக்கிறது. இப்பொழுது தன்வசமிருக்கும் ஆபிரிக்க ஆசிய நாடுகளைத் தன் வசமே வைத்துக்கொள்வதற்காகப் பிரிட்டன் இந்தயுத்தத்தில் போரிடுமானல், இப்போரை வெல்வதற்குப் பிரிட்டனுக்கு யோக்கியதையில்லையென்றே சொல்ல வேண்டும்.

இலங்கைச் சர்வகலாசாலை

நேற்று உதயமாயிற்று

நேற்றுத் தொடக்கம் இலங்கைச் சர்வகலாசாலை 1921ம் ஆண்டு ஜனவரி மீ ஸ்தாபிக்கப்பட்ட சர்வகலாசாலைக் கல்லூரிக்குப் பதிலாக நடைக்கு வந்திருக்கிறது.

தற்காலிகமாகக் கொழும்பிலுள்ள சர்வகலாசாலைக் கல்லூரி இலங்கை வைத்தியக் கல்லூரி ஆகியவற்றின் கட்டிடங்களே புதிய சர்வகலாசாலையாக விருக்கும்.

இலங்கைச் சர்வகலாசாலைச் சட்டவிதிகள் எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரும். சர்வகலாசாலை கண்டிக்கு மாற்றப்படும் வரை சட்டத்தின் சில பிரிவுகள் மட்டும் தற்காலிகமாக [illegible] நியமிக்கப்படமாட்டார்கள்.

சுயேச்சையான ஸ்தாபனம்

புதிய சர்வகலாசாலை சுயேச்சையான அதிகாரங்களும் உரிமைகளுமுடைய தனிப்பட்ட ஸ்தாபனமாகும். சர்வகலாசாலையிற் பரீட்சிக்கப்படுவர், வெளிமாணவர்கள் இதன் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். கலை, விஞ்ஞானம், கீழைத்தேசப்பாஷைகள், வைத்தியம் ஆகியவை சம்பந்தமான தத்துவப்பகுதிகள் இதில் ஏற்படுத்தப்படும். சட்டத் தத்துவப்பகுதி மற்றொரு தினத்திற் சேர்த்துக்கொள்ளப்படும்.

மேன்மை தங்கிய தேசாதிபதி உத்தியோகப்பற்றற்ற அத்தியட்சகராவார். கல்வி மந்திரி மிஸ்டர். வி. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரா பிரதி அத்தியட்சகராவார். அத்தியட்சகர் இல்லாதசமயங்களில் 'கோர்ட்' கூட்டங்களிலும் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாக்களிலும் இவர் தலைமை வகிப்பார்.

டக்டர். டப்ளியூ. ஐவர் ஜென்னிங்ஸ் முதலாவது உப அத்தியட்சகராகத் தேசாதிபதி நியமித்திருக்கிறர். இவரே பிரதம நிர்வாக அதிகாரியாகவும் கல்வி விவகார அதிகாரியாகவும் கடமையாற்றுவார்.

சர்வகலாசாலைக் கல்லூரிப் போராசிரியர்களும் போதனுசிரியர்களும் இலங்கை வைத்தியக் கல்லூரியும் புதிய சர்வகலாசாலைச் சிப்பந்திகளாவர்.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(396 மீ)

(† இசைத்தட்டு)

வியாழன் ஜூலை 2

காலை 7.15 தோரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 9.30 வாஞெலி வாத்தியக் கோஷ்டி 7.40 டாக்கி கானம்† 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8.10 சங்கீதம்† 8.20 எம். ஆர் குஞ்சாம்பாள் 9.00 ஒலிபரப்பு முடிவு

1.00 திரைகானம்† 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 எம் ஆர் குஞ்சாம்பாள் 2.00 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2.30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5.00 எஸ் சரஸ்வதி 5.45 இசைப்பயிற்சி 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 6.35 தமிழில் செய்திகள் 6.45 எஸ் சரஸ்வதி (சங்கராபரணமையர் சாகித்தியங்கள்) 7.15 செய்திக்கதம்பம் தமிழில் [illegible] அஞ்சல் 7.30 அறிவிப்புகள் செய்திவிளக்கம் 7.45 மன்னர்குடி ராஜகோபால் பிள்ளை பாட்டு கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை வயலின் பழனி சுப்ரமணியபிள்ளை மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டன் அஞ்சல் 10.00 ஒலிபரப்புமுடிவு

வெள்ளி ஜூலை 3

காலை 7.15 தோரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 வாஞெலி வாத்தியக் கோஷ்டி 7.40 காலை இசை† 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8.10 திரைகானம்† 8.20 சமயபுரம் கே நாராயணசுவாமி பிள்ளை (வேதநாயகம் பிள்ளை சாகித்தியங்கள்) 9.00 ஒலிபரப்புமுடிவு

1.00 டாக்கி கீதங்கள்† 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 சமயபுரம் கே நாராயணசுவாமிபிள்ளை 2.00 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2.30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5.00 பி. சரஸ்வதி 5.40 குரான்-இ-ஷரீப் கவ்வாலிகள் † 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 6.35 தமிழில் செய்திகள் 6.45 டி. என். ஆர் நடராஜ சுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 7.15 இலக்கிய வாசகம் 7.30 அறிவிப்புகள் 7.45 இருவர் இசை † 8.00 பி. சரஸ்வதி 8.30 உலக விவகாரங்கள் 8.'5 டி. என். ஆர். நடராஜ சுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 9- 0 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டன் அஞ்சல் 10.00 ஒலிபரப்பு முடிவு.

சனி ஜூலை 4

காலை 7.15 தோரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 வாஞெலி வாத்திய கோஷ்டி 7.40 திரைகானம் † 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8.10 படப்பாட்டுகள் † 8.20 திருக்கோடிகாவல் ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 9.00 ஒலிபரப்பு முடிவு.

1.00 டாக்கி இசை † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருக்கோடிகாவல் ஆர். கிருஷ்ண ஐயர் வயலின் 2.00 தமிழில் செய்திகள் 2.05 ஐரோப்பிய சங்கீதம் † 2.30 ஒலிபரப்பு முடிவு

மாலை 5.00 என். ராமநாதன் 5.40 தேவாரவிளக்கம் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 6.35 தமிழில் செய்திகள் 6.45 என். ராமநாதன் 7.15 அமெரிக்க சுதந்திர தினம் 7.30 அறிவிப்புகள் 7.45 மதராஸில் உள்ளபடி 9.00 கதம்பம் † 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டன் அஞ்சல் 10.00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஜூலை 5

காலை 7.15 தோரம்பம் † 7.20 தமிழில் செய்திகள் 7.30 ஆ. இ. ரே. வாத்திய வித்வான்கள் (இசைத்தட்டு) 7.40 பாண்டுரங்க விட்டல் (இசைத்தட்டு) 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8.10 திரைகானம் (இசைத்தட்டு) 8.20 காஞ்சிபுரம் எம். என். வெங்கடவரத பிள்ளை 9.00 ஒலிபரப்பு முடிவு.

12.00 உலகப்போக்கு (இசைத்தட்டு) 12.30 ஓவிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 காஞ்சிவரம் எம். என். வெங்கடவரதபிள்ளை 2.00 தமிழில் செய்திகள் 2.05 குரல் வகைகள் (இசைத்தட்டு) 2.30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 ராஜலக்ஷ்மி மோஹன் ராவ் வீணை பாட்டு 5.40 சமய ஒலிபரப்பு 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6.35 தமிழில் செய்திகள் 6.45 ராஜலக்ஷ்மி மோஹன் ராவ் 7-15 எங்கள் தபால் பெட்டி 7.30 அறிவிப்புகள் 7.45 பல்கலைக்கழக ஒலிபரப்பு 8.00 திருச்சி சகோதரிகள் பாட்டு 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டன் அஞ்சல் 10.00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஜூலை 6

காலை 7.15 தோரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 வாஞெலி வாத்திய கோஷ்டி 7.40 காலை கானம் (இசைத்தட்டு) 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 கே. சாம்பமூர்த்தி (இசைத்தட்டு) 8.20 முடிகொண்டான் ராஜமாணிக்கம் பிள்ளை நாகஸ்வரம் 9.00 ஒலிபரப்பு முடிவு.

1.00 படம்பாட்டுகள் (இசைத்தட்டு) 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 காஞ்சிவரம் கே. கோவிந்த பிள்ளை 2.00 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 முடிகொண்டான் ராஜமாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம் 5.45 இசைப்பயிற்சி 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6.35 தமிழில் செய்திகள் 6.45 காஞ்சிவரம் கே. கோவிந்த பிள்ளை 7:15 செய்திச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7.45 கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டன் அஞ்சல் 10.00 ஒலிபரப்புமுடிவு

ஜூலை மாதப் பெற்றோல் விநியோக அளவு

குறைக்காதிருக்க அதிகாரிகள் தீர்மானம்

இப்பொழுது இருந்துவரும் பெற்ரோல் விநியோக அளவே மிகக் குறைவானதென நாம் உணர்ந்திருப்பதால் ஜூலை மாதத்திய அளவு அநேகமாகக் குறைக்கப்படமாட்டாது. எனினும், நாம் பெற்ரோல் விநியோக அளவை அதிகரிக்கத் தயாராகவில்லை என்று பெற்ரோல் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜே. என். ஆறுமுகம் சென்ற செவ்வாய்க்கிழமை ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கும்போது குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

ஜூன் மீ மேலதிகமான பெற்ரோல் விநியோக அளவு அநுமதிக்கப்பட்ட பஸ்களுக்கு அதே அதிகரிக்கப்பட்ட அளவு ஜூலை மாதத்திற்குமுண்டு.

அத்தியாவசியச் சாமான்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விஷயத்திலும் ஜூலை மீ அநுமதிக்கப்பட்ட அளவு மாற்றப்படமாட்டாது.

இது சம்பந்தமாக பொதுமக்களின் பூரண ஒத்துழைப்புக் கோரப்படுகிறது.

தனிப்பட்ட கார்க்காரர்களுக்கு கூடுமான விநியோக முடிந்த அளவை நாம் அநுமதித்திருக்கிறோம். இவர்கள் தங்களுக்கேற்படக் கூடிய வசதிக்குறைவை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தேகவியோகம்

திரு. S. மயில்வாகனம்

வைத்திய சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த சில்ல மெடிக்கல் ஸ்ரோர்ஸ் பிரதம கிளார்க்காக விருந்து இளைப்பாறியவராகிய திரு. S. மயில்வாகனம் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் கந்தர் மடத்திலுள்ள தமது இல்லத்தில் தேகவியோகமாயினர். என்னுந் துக்கச் செய்தியை இங்கு குறிப்பிட வேண்டியவர்களாயிருக்கிரும். இவர் ஏறக்குறைய 40 வருடங்களுக்கு அரசாங்க சேவையிலிருந்தவராவர். இவர் [illegible] வேலையில் ஈடுபட்டு நீடித்தகாலமாகத் தனதிகாரியாகவும் இருந்தவர்.

இவரைப் பிரிந்து வருந்தும் இவரது மனைவிக்கும் மக்களாகிய புதல்வர் அறுவர்க்கும் புதல்வியர் இருவர்க்கும் மருகராகிய இப்போது யாழ்ப்பாணத்திற் கடமையாற்றும் அதவக்காத் திரு. S. சபாபதிப்பிள்ளை யவர்கட்கும் ஏனைய சுற்றத்தினர்கட்கும் எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

அநுராதபுரத்துக்கு ஜலவசதி அவசியம்

பேதிநோய் கற்பித்த பாடம்

அநுராதபுரத்தில் பேதிநோய் பரவியதன்பலனுக நகருக்கும் புகைரதப் பகுதிக்கும் குழாய்கள் மூலம் தண்ணீர் 'சப்ளை' செய்யவேண்டிய அவசியம் உணரப்பட்டிருக்கிறது.

இவ்வாறு சுகாதார உதவி டைரெக்டர் மிஸ்டர். டப்ளியூ ஜி. விக்கிரமசிங்க சென்ற திங்கட்கிழமை ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கும்போது குறிப்பிட்டார்:-

சென்ற மூன்றுவார காலமாக அநுராதபுரத்திற் கடமையாற்றிய பின்னர் டக்டர் விக்கிரமசிங்கா இப்பொழுது கொழும்புக்குத் திரும்பினர். நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை யெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினர்.

கடைசியாகப் பலத்த நோய் பீடித்த தினம் இம்மாதம் 8ந் திகதியாகும். நுணுக்கமான பரிசோதனையின் விளைவாக நோயால் அதிகம் பாதிக்கப்படாத சிலர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

நகரம் முழுவதும் 12 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் தினந்தோறும் ஒரு சுகாதார உதவிபதிகாரியாற் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நான்கு சுகாதார உதவி அதிகாரிகளின் தலைமையில் ஒரு வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறர்.

நகரின் மத்தியிலுள்ள சில சுகாதாரமற்ற பகுதிகளை நுணுக்கமாகவும் இடைவிடாமலும் கண்காணிக்க அவசிய மேற்பட்டிருப்பதாகவும் அநுராதபுரத்தில் நவீன தொற்று நோய் ஆஸ்பத்திரியொன்றை அமைக்கத் திட்டமான அவசிய மேற்பட்டிருப்பதாகவும் டக்டர். விக்கிரமசிங்கா கூறினர்.

ஸர். கிரிப்ஸுக்கு சத்தியமூர்த்தியின் பதில்

காங்கிரஸ் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துகிறார்

குற்றாலம், ஜூன் 26

ஸ்ரீ சத்தியமூர்த்தி கீழ்க்கண்ட அறிக்கையை யு. பி. மூலமாக விடுத்திருக்கிறார்:-

ஸேர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஒரு உறுதியற்ற அரசியல்வாதிபோலும். வெகு நாளைக்கு முன்னமேயே பிரிட்டனிலுள்ள தொழிற்கட்சி அவரைக் கண்டுபிடித்து விட்டது; இந்தியா இப்பொழுது அவரைப் பற்றித் தெரிந்துகொண்டது. மலேயாவிலிருந்தோ அல்லது பர்மாவிலிருந்தோ வெளியேறப் பிரிட்டன் சம்மதித்ததா; என்ன? ஆகவே, இந்தியாவை விட்டுத் தாங்கள் வெளியேறமாட்டோமென்று ஸேர். கிரிப்ஸ் கூறுவது மற்றவைகளைப் பொறுத்தாகும். அவர் ஏன் இந்தியாவிலிருக்கவிரும்புகிறார்? ஏகாதிபத்திய நோக்கங்களுக்காக இந்தியா வெகு முக்கியம் என்பதை அவர் மறந்தாலும் அந்நோக்கங்களுக்காகவே தான் அவர் இங்கிருக்க விரும்புகிறார்.

காங்கிரஸ் கோரிக்கை

இந்திய ஜனங்கள் கையில் உண்மை அதிகாரத்தை மாற்றிவிட வேண்டுமென்ற காங்கிரஸ் கோரியதைப்பற்றிக் குறிப்பிட்டு அது பெரும்பான்மைக் கொடுங்கோன்மைக்கான கோரிக்கையென்று அவர் நியாயமற்ற முறையில் சொன்னார். நாமும் காங்கிரஸ் தலைவர்களும் தேசிய அரசாங்கத்தின் குறிப்பிட்ட கோவைபற்றி ஒருநாளும் விவாதிக்கவில்லையென்று கிரிப்ஸ் இப்பொழுது ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால் தமது அறிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்ளுவதற்கு மட்டும் அவருக்கு ஆற்றலில்லை.

"தேசிய அரசாங்கம், மந்திரிசபை" என்ற பதங்களை அவற்றின் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை அர்த்தத்தில் உபயோகிக்கவில்லை யென்றும், ஆனால் தமது எண்ணங்களை விளக்குவதற்கே உபயோகப்படுத்தியதாகவும் அவர் கூறுவது அவருடைய சாமர்த்தியத்தையே இன்னும் அதிகமாகக் காட்டுகிறது. அந்த எண்ணங்கள்தான் என்ன தயவு செய்து சொல்லுங்களேன்? இந்த வார்த்தைகளை காங்கிரஸ் தலைவர்கள் சாதாரண அர்த்தத்திலேயே எடுத்துக்கொண்டார்கள். இப்பொழுது கிரிப்ஸ் அவற்றிலிருந்து வழுவுகிறார்.

'பாகிஸ்தான்'

பாகிஸ்தான் ஒருநாளும் உருவாகாதென்று ஸேர். கிரிப்ஸ் கூறுகிறார். இதுவிஷயத்தில் நான் அவருடன் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், ஏனைய கட்சிகள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதாவது (வேறு விதமாகச் சொன்னால்) ஜின்னா ஒப்புக்கொள்ளாவிட்டால் ஒன்றும் நடக்காதென்று அவர் அமெரிதிட்டத்தையே திருப்பச் சொல்லுகிறார்.

தயவுசெய்து அவமானப்படுத்த வேண்டாம்

பாதுகாப்புப் பிரிட்டிஷ் பொறுப்பாகவே இருக்க வேண்டுமென்று கிரிப்ஸ் தெளிவாகச் சொல்லுகிறார். அமெரிக்கக் கொள்கையை உத்தேசித்து அவரது யோசனைகள் நிராகரிக்கப்படவில்லை. ஆனால், இந்திய மக்களுக்கு உண்மை அதிகாரத்தைக் கொடுக்க மறுத்ததால்தான் அவை நிராகரிக்கப்பட்டன. தாங்கள் எப்பொழுதும்போல் உண்மையாக சமரஸத்தையே விரும்புகிறோம் என்று கிரிப்ஸ் கூறுகிறார். அப்படியானால் எங்களுக்கு அதிகாரம் கொடுங்கள் இல்லையேல் பேசாமலாவது இருங்கள். தயவு செய்து எங்களை அவமானப்படுத்தாதீர்கள்.

பெரிய புராண படனம்

இந்துசாதனத்தின் சென்ற இதழில் வெளியிடப்பட்டபடி கரவை வெல்லனிற் பிள்ளையார்கோவிலில் வருகிற 5-7-42 ஞாயிற்றுக்கிழமை நிகழவிருக்கும் பெரியபுராணபடன விழாவின் போது நிகழும் நிகழ்ச்சிகளோடு மாலுடைப் பிறவியென்னும் பொருள்பற்றி அராலி தெல்லைச்சேர்ந்த திரு. வே. கந்தையா அவர்கள் சொற்பொழிவும் ஒன்று நிகழுமென்று அறிவிக்கப்படுகிறது.

—நிருப

சுபாஷ் பாபுவின் கட்சிக் காரியாலயங்கள்

கட்டிடங்கள் பூட்டப்பட்டன

அலகபாத் ஜூன் 26—

உள்ளூர் இரகசியப் பொலீஸார் இங்குள்ள முன்னேற்றக்கக்ஷிக் காரியாலயத்தை இன்று சோதனையிட்டுப் பத்திரங்கள் மரச்சாமான்கள் ஏறக்குறைய 12 புத்தகங்கள் இவற்றைக் கைப்பற்றினர். கட்டிடம் ஸீல்வைத்துப் பூட்டப்பட்டது.

மாணவர் சம்மேளனத்துக்குச் சொந்தமான சில பாத்திரங்களும் மேற்படி கட்டிடத்திலிருந்தன. சம்மேளன நிர்வாகிகள் விஞ்ஞாபித்துக் கொண்டதன் பேரில் ஆக்ஷேபனையற்ற பத்திரங்களைத் திருப்பிவிட ஜில்லா மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

மைமன் ஸிங்கில்

நகர முன்னேற்றக்கக்ஷிக் காரியதரிசி உட்படப் பல நிர்வாகிகளின் வாசஸ்தலங்களையும் பொலிஸார் நேற்றிரவு சோதனையிட்டதற்குப்பிறகு மேற்படி காரியாலயம் பூட்டி ஸீலிடப்பட்டது.

டாக்காவில்

நகரின் பல்வேறு பகுதிகளிற் பொலிஸார் சோதனை நடத்தியதற்குப்பிறகு காங்கிரஸ் ஊழியர் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

காசியில்

நேற்றுமாலை நான்கு இடங்களில் சோதனை நடந்தது. இரண்டிடங்களில் பொலிஸார் அங்கிருந்த பத்திரங்களைக் கைப்பற்றினர்.

பீஹாரில்

பீஹார் மாகாண முன்னேற்றக் கக்ஷியையும் அதன் எல்லாக்கிளைகளையும் கலைத்துவிட்டதாக மாகாண முன்னேற்றக் கக்ஷிப் பொதுக்காரியதரிசி அறிவித்திருக்கிறார்.

பம்பாய் ஜூன் 26—

உள்ளூர் முன்னேற்றக்கக்ஷிக் காரியாலயத்தைப் பொலிஸார் இன்று சோதனையிட்டனர். இரண்டுமணி நேரத்துக்குப்பிறகு அவர்கள் கட்டிடத்தைச் ஸீல்வைத்துப் பூட்டிவிட்டார்கள்.

அபேதவாதி வீட்டில் சோதனை

காங்கிரஸ் அபேதவாதக் கக்ஷிப் பொதுக்காரியதரிசி ஸ்ரீமான் வி. மேத்தாவின் வீட்டைப் பொலீஸார் இன்று சோதனையிட்டுப் பிரிக்கமுடியாத இந்தியா என்ற துண்டுப் பிரசுரத்தின் நகல்களைக் கைப்பற்றினர்.

குத்தகைக்கு நிலம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தென்னந்தோட்டம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமானதும் எழுதுமட்டுவான் புகைவண்டி நிலையத்திலிருந்து 2 மைல் கல்லுக்கப்பாலுள்ளதும் ஆகிய தென்னந்தோட்டத்தைக் குத்தகைக்குக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும். குத்தகை மூன்றுவருஷத்திற்கு அளிக்கப்படும். கேள்விபத்திரங்கள் அனுப்புவோர் தாம்அனுப்பும் பத்திரங்களில் வருஷம் ஒன்றுக்குத் தாம் குத்தகைப்பணமாக எத்தொகையைக்கொடுக்கத் தயார் என்பதைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

குத்தகை எடுப்போர் ஒருவருஷக் குத்தகைப்பணத்தை முற்பணமாகக் கொடுத்தல் வேண்டும். தோட்டத்திலுள்ள கட்டிடங்களையும் வேலிகளையும் நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும். தோட்டத்திற் செடிகள் முதலியவை வளராமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அன்றியும் ஒவ்வொரு வருஷமும் தோட்டத்தில் மூன்றில் ஒருபங்கு நிலத்தை மாறி மாறித் தமது செலவிலேயே உழவுக் தண்ணீர் ஊற்றவேண்டிய தென்னம் பிள்ளைகளுக்குத் தண்ணீர் ஊற்றவும் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் மேலுறையில் "தென்னந்தோட்டக் குத்தகைக் கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிடப்பட்டு நன்றாகச் சீல் பண்ணப் பெற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபைக் காரியதரிசிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

1942-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ந் திகதிவரை கேள்விப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்படும்.

மிக அதிகமான குத்தகையளிக்கத் தயாராயிருக்கும் கேள்விப்பத்திரத்தையேனும் அல்லது வேறு எந்தக்கேள்விப் பத்திரத்தையேனும் நிருவாகசபை அங்கீகரிக்க வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை.

T. முத்துச்சாமிப்பிள்ளை
கௌரவ காரியதரிசி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
அதிகாரசபை

Mis 68 2—9-7-42

இந்தியர் பூரணமாக ஒத்துழைக்க வேண்டியதன் அவசியம்

நேசதேச லக்ஷியம் பற்றி ஸேர். வாஜ்பேயர்

லண்டன் ஜூன் 27—

ஞாயிற்றுக்கிழமை இரவு நியூயோர்க்கிலுள்ள இந்திய சமூகத்தினர் இந்தியாவின் ஏஜெண்ட் ஜெனரலான ஸேர். ஜி. எஸ். வாஜ்பேயருக்கு ஒரு விருந்து நடத்தினர். ஸேர். வாஜ்பேயர் பின்வருமாறு பிரசங்கித்தார்:-

இங்குள்ள இந்திய மக்களது அந்தஸ்துப்பற்றி நான் அமெரிக்க அதிகாரிகளுடன் விவாதித்தேன். அமெரிக்க அதிகாரிகள் அன்புடனும் உதவி செய்யும் எண்ணத்துடனுமிருப்பதைக் கண்டேன். அவர்கள் நமது கஷ்டங்களை உணர்ந்திருக்கின்றார்கள். அவர்களது மனோபாவம் மிக்க ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்கிறது. இங்கு எமது தேசத்திற்கு ஊழியஞ் செய்வதால் உண்டாகும் சந்தோஷம் வேறு எந்த இடத்திலும் உண்டாகவில்லை. யுத்தத்தை ஜெயிக்க இந்திய சமூகம் எவ்வளவு அதிகமாக முயற்சி செய்ய முடியுமோ அவ்வளவு அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். இதற்காக இந்தியர்கள் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டு ஒத்துழைக்க வேண்டும். இந்தியர்கள் நேசதேசங்களது இலக்ஷியங்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டிய அவசியம், இந்தியரும் இதேலக்ஷியங்களை அடைய நோக்கம் கொண்டிருக்கிறார்கள்.

விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 1038 ம் இலக்க Testy வழக்கில் 1942 ம் வருஷம் ஆனி மாதம் 25-ம் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி, கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகளும் மற்றும் அசைவுள்ள சாமான்களும் 1942 ம் வருஷம் ஆடி மாதம் 25 ம் தேதி சனிக்கிழமை 3-ம் காணி முற்பகல் 10½ மணி தொடக்கமும் 1-ம் 2-ம் காணிகளும் மற்றும் அசைவுள்ள சாமான்களும் பிற்பகல் 4 மணி தொடக்கமும் அந்தந்தக் காணிக்குள்ளின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். அசைவுள்ள சாமான்கள் கொழும்புத்துறையில் கீழே கண்ட 2-ம்காணிக்குள் வைத்து பிற்பகல் 4 மணிவரையில் விற்கப்படும்.

விடயம்

கொழும்புத்துறை சுப்பிரமணியம் கைம்பெண் கனகாம்பிகையின் தத்துவ ஆதனம்.

கொழும்புத்துறை சுந்தர் ஆறுமுகம் சுந்தர் தத்துவகாரன்.

காணிகள் விபரமும் அசைவுள்ள சாமான்கள் விபரமும்

1-ம் காணி சிவியாதெரு இறை "பிராயடி வளவு" பர. கில. குலா. 15 உம் இதனுள் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி, பெண் செல்லம்மா வடக்கு செல்லையா பெண் பொன்னம்மாவும் மறுவும் மேற்கு விசுவலிங்கமும் கை ஒழுங்கையும் தெற்கு வேலுப்பிள்ளை நாகலிங்கம் இதடைகளும் இதைச் சேர்ந்தவைகளும்.

2-ம் காணி கொழும்புத்துறை "மடத்து வளவும்" மடத்துக்கு வடக்கு பண்டிதரான்வும் பர கில இலா 29 இனதும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு காலஞ்சென்ற கனகாம்பிகையின் ஆதனமும் மறுவும் வடக்கு முத்தர்க்கு மாரசாமி கைம்பெண் பாக்கியம் மேற்கு தரையப்பாவும் மறுவும் தெற்கு ரோட்டு தென்மேற்குப் புறமாக விருக்கும் கோவில் நிலம் புறநீங்கலாக இந்தக் காணியில் சோரியலாய் ¼ பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

அசைவுள்ள சாமான்கள் ஒருமரப் பெட்டி (மதிப்பு ரூபா 5.) ஒரு கட்டில் (மதிப்பு ரூபா 10.) (ஒரு அட்டியல் மதிப்பு ரூபா 75.) ஒரு பதக்கம் மதிப்பு ரூபா 10.

3-ம் காணி நாவற்குளி இறை "பண்டார வயல்" பர செல் இலா 20 எல்லை கிழக்கு நாகன் வேலாயுதன் வடக்கு சின்னத்தம்பி ஆறுமுகமும்மறுவும்மேற்கு அருணாசலம் தெற்கு கடைவரம்பு இடங்களும் இதைச் சேர்ந்தவைகளும்.

சே. சந்திரசேகரம்
கொம்மிஷனர்

கொக்குவில் 25- 6- 42.
Mis 69 2- 7- 42.

விநாயகரின் கிரீடம் களவு போயிற்று

சென்னை ஜூன் 26—

பெரியமெட் வரசித்தி விநாயகர் கோவிலில் பிள்ளையாரின் கிரீடம் 21-ந் தேதி இரவு களவு போனதாகக் கூறப்படுகிறது. பொலீஸார் விசாரித்து வருகின்றனர்.

புதிய அரிசி விநியோக அளவுகள்

தொழில்களுக்கேற்றவாறு நிர்ணயிக்கப்படும்

புதிய அரிசிக் கூப்பன் புத்தகங்களை விநியோகிப்பதையொட்டி மக்களுக்கு அவரவர் தொழில்களுக்கேற்றவாறு அரிசியளவை நிர்ணயிப்பதற் கேதுவாக வகுப்புவாரியான கணக்குவிவரங்கள் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தொழில்கள் சம்பந்தமாகச் சாதாரண வேலையி லீடுபடுபவர்களென்றும் சரீர உழைப்புத் தொழிலாளரென்றும் இரு வகுப்புக்களாக மக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இரண்டாவது வகுப்பினரது மேலதிகமாக ¼ படி அரிசி விநியோகிக்கப்படும்.

பற்பல தொழில்கள் சம்பந்தமாக 125 பிரிவுகளாக மக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

சரீர உழைப்புத் தொழிலாளர் ஏறக்குறைய 50 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

கணக்கு வேலையி லீடுபடுபவர்கள், சலூன் தொழிலாளர் ஆகியோருக்குச் சாதாரண அளவு அரிசி கிடைக்கும். பஸ் சாரதிகளுக்குக் கார்ச் சாரதிகளுக்குரிய அரிசியைவிடக் கூடுதலாக விநியோகிக்கப்படும்.

கிடுகு பின்னுபவர்கள், பிரம்பு வேலையி லீடுபடுபவர்கள், கசாப்புக் கடைக்காரர்கள் ஆகியோருக்கு உத்தியோக வேலையி லீடுபடுபவர்க்குரிய சாதாரண அளவே விநியோகிக்கப்படும்.

சைக்கிள் சவாரிசெய்யும் சேவகருக்குச் சைக்கிள் பழுது பார்ப்பவர்களின் அளவைவிட அதிக அரிசி விநியோகிக்கப்படும். அதேபோலப் புகைரதச் சாமான்களைச் சுமக்கும் தொழிலாளருக்குப் புகைரதப் பொலிசாரின் அளவைவிட அதிக அரிசி விநியோகிக்கப்படும்.

இயந்திரம் முதலியவற்றைத் துடைத்துச் சுத்தப்படுத்துபவர்களுக்குச் சாதாரண அளவு வழங்கப்படும். ஆயின், தச்சர் இயந்திரச் சாரதிகள் தோட்டத் தொழிலாளர் துறைமுகத் தொழிலாளர் ஆகியோருக்கு அதிக அரிசி விநியோகிக்கப்படும்.

சகலஎஞ்ஜினியர்களுக்கும்இன்ஸ்பெக்டர்களுக்கும் சாதாரண அளவு மாத்திரமுண்டு. தெரு வியாபாரிகளுக்கும் அதே அளவு கிடைக்கும்.

அது வேலையி லீடுபடுபவர்களுக்கு அதிக அரிசி அளவும் பால் விற்பனைக் காரருக்குக் குறைந்த அளவும் கிடைக்கும். வீட்டு வேலைக்காரருக்கு அதிக அளவு கிடைக்கமாட்டாது.

தோல்வேலை செய்பவர்களுக்கும் அதிக அளவு கிடைக்கும். தகர வேலையி லீடுபடுபவர்கள் பறையடிப்பவர்கள் ஆகியோருக்குச் சாதாரண அளவு மாத்திரம் உண்டு. சேவகர்கள் தோட்ட முதலாளிகள் டக்டர்கள் வழக்கறிஞர்கள் இயந்திர வேலையி லீடுபடுபவர்கள் ஆகியோருக்கும் அதே அளவு உண்டு.

---

5 சத நோட்டுகள் வரவிருக்கின்றன

இப்போதைய சில்லறைத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் பொருட்டு ஐந்துசத நாணய நோட்டுகளை அரசாங்கம் விநியோகிக்கவிருக்கிறது.

"ஐந்து ரூபாய்க்கு மேற்படாத தொகையைச் செலுத்துவதற்கு இந்நோட்டுச் சட்டரீதியானதாகும்" என்ற வாசகம் நோட்டுகளில் எழுதப்பட்டிருக்கும் நோட்டுகளின் மூலை ஒவ்வொன்றிலும் அவற்றின் மதிப்புக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நோட்டின் மத்தியில், மாகல் வர்ணத்தில் இரண்டு சத முத்திரையொன்றும் மூன்று சத முத்திரையொன்றும் ஒன்றின் பக்கத்தில மற்றொன்றாகப் பதிக்கப்பட்டிருக்கும்.

"1942ம் வருடம் ஜூன் மாதம் முதல் தேதி" என்ற மொழிகள் பொறிக்கப்பட்டிருக்கும் இந்நோட்டுகளில் நிருவாளர்கள் எச். ஜே. ஹக்ஸாம், சி. எச். கொலின்ஸ் ஆகியோரின் நகல் கையொப்பங்களிடப்பட்டிருக்கும் நோட்டுகளில் நீர் அடையாளங்களிருக்கமாட்டா.

பாகிஸ்தான்மீது அவநம்பிக்கை

'பிரிவினைக்கு பிரிட்டன் இணங்கினுல் இந்தியரிடையே மனக்கசப்பு அதிகரிக்குமாம்'

மிஸ்டர். முன்ஷியின் அறிக்கை

பம்பாய் ஜூன் 26—

ஸ்ரீமான் கே. எம். முன்ஷி பத்திரிகைக்கு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

என்று முஸ்லிம் லீக் பாகிஸ்தானே தனது லக்ஷியம் என்று அறிவித்ததோ அன்றே அது இந்தியா மீது போர்தொடங்கி விட்டது. விவேகமுள்ளவர்களுக்கு இதிற் சந்தேகம் வேண்டியதில்லை. இப்பொழுது இந்தியர் பேரிற் பல முனைகளில் யுத்தம் நடத்தப்படுகிறது பிரிவினை வேண்டுவோர் இச்சந்தர்ப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளப் பார்க்கின்றனர். 'லீக்' நிர்வாகிகள் வெளியிடும் அறிக்கைகளைக் கவனிக்கையில் ஜனநாயகத்தின் பெயரால் பாகிஸ்தானைத் திணிக்கவே எண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

சௌதரி கலிக்குஸ்ஸமான் சமீபத்தில் பம்பாயில் ருசிகரமாகப் பேசினார். இந்நாட்டைப்பிரித்துவிட முஸ்லிம் லீக் தலைவர் தனி யோசனையுடனிருக்கிறார். 1915ம் வருஷம் லக்ஷ்மணபுரியில் அவர் சுயராஜ்யத்துக்காகப் போராடுவதாகக் கூறிக் காங்கிரஸிடமிருந்து தனித் தொகுதிகளைப் பெறுவதில் வெற்றியடைந்தார். 1932 33ல் லண்டனில் நடந்த சர்வகட்சி மகாநாட்டில் இந்தியாவின் தேசிய அபிலாஷைகளைக் குலைப்பதிற் பிரிட்டனுக்கு உதவுவதாகக் கூறிப் பிரிட்டிஷாரின் 14 கோட்பாடுகளில் 13 கோட்பாடுகளைப் பெற அவரால் முடிந்தது. 1938ல் அவர் என்ன செய்தார் தெரியுமா? புதிய அரசியலிற் பாதிக்குப் பாதி ஸ்தானங்களை லீக்கு வழங்கினால் பிரிட்டிஷாருடன் நடத்தும் போராட்டத்தில் தாமும் தம்மைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைப்பதாக அவர் தெரிவித்தார். மேற்படி காரியத்தைச் செய்தால் பிரிட்டிஷாருக்கு உதவி புரிவதாக 1936ல் அவர் கூறினார். யுத்தம் முடிந்ததற்குப் பிறகு சுயேச்சைத் தன்மை வாய்ந்த முஸ்லிம் ராஜ்யங்களை வழங்குவதாயின் இந்தியாவிலிருந்து எதிரியை விரட்டியடிப்பதில் பிரிட்டனுக்குத் தாம் உதவுவதாகச் சமீபத்தில் அவர் அறிவித்தார். இவர்தான் அதிர்ஷ்டம் வாய்ந்த உண்மைத் தலைவர்!

பாகிஸ்தான் கோரிக்கையைச் சமாதானத் தூண்டுதல் மூலம் சமாளிக்கலாமென்று எண்ணுவது முட்டாள்தனமாகும். இனிமையான சில மந்திரங்களை உச்சரிப்பதால பாகிஸ்தான் கூச்சலை அடக்கிவிட முடியாது. யுத்த நெருக்கடியில பிரிவினை வேண்டுவோருடன் சமரஸம் பேச முற்படுவது இந்தியர் தற்கொலை புரிந்துகொள்ளுவதற்கு ஒப்பாகும். அன்று அமெரிக்கத் தலைவர் ஆப்ரஹாம் லிங்கன் கூறியதுபோன்று இன்று "பாகிஸ்தான் கூடாது" என்றுதான் நாம் சொல்லவேண்டும். பாகிஸ்தானுக்கு பிரிட்டன் இணங்கினால இந்திய மக்களின் ஆத்திரத்தைச் சமாளிக்க அது தயாராக இருக்கவேண்டும். நாட்டினைப் பிரிக்கப் பிரிவினை யோசனைக்கு ஆதரவுகாட்டி வருவதாலேயே இந்த யுத்தத்தில பிரிட்டனுக்கு அனுதாபம் கிடைக்கவில்லை.

வடமத்தியமாகாண நெல் விளைவு

விவசாயிகளின் கஷ்டமான நிலைமை

உணவு உற்பத்தி விஷயமாக அனுராதபுர டிஸ்திறிக்கிலும் பொதுவாக வடமத்திய மாகாணத்திலும் ஒரு கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

உணவுப் பொருள் 'சப்ளை'கள் குறைந்ததோ இந்நிலைமை ஏற்படவில்லை. அதிக உணவு உற்பத்திப் பிரசாரம் இம்மாகாணத்தில் நல்ல பலனை அளித்திருக்கிறது. இதுவே இம்மாகாண நெல்விளைவுக்கு மிக்க இடைஞ்சல்ஏற்படுத்தும் போல இருக்கிறது.

அதிக விளைச்சல் காரணமாக அரசாங்கத்தார் நெற் கிட்டங்கிகளெல்லாம் நிரம்பிவிட்டன. இனிமேல் அரசாங்கத்தார் நெல் வாங்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

இதனால் விவசாயிகள் தங்களுடைய நெல்லைக் குறைந்த விலைக்குக் கடைக்காரர்களுக்கு விற்க நேரிட்டிருக்கிறது.

மற்ற மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கு விற்கக்கூடிய நெல் ஏராளமாக இருப்பதாகவும், அப்படி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யாவிட்டால், கடைக்காரர்களின் துன்பம் பொறுக்க முடியாமல் விவசாயத்தையே நிறுத்தும்படியான காலமேற்படலாமென்றும் இவ்விடத்திலுள்ள விவசாயிகள் பயப்படுகிறார்கள்.

மெர்ஸா மாட்ரூ அருகில் அகோரமான சமர்

கவசப் படைகளும் கைகலந்தன

கார்க்கோவில் ஜெர்மன் தாக்குதலின் வேகம் அதிகரித்து வருகிறது

லண்டன் ஜூன், 29

இன்று கெய்ரோவிலிருந்து விடுக்கப்பட்ட மத்தியக் கிழப் பிரதேச யுத்த அறிக்கையின் விபரம் வருமாறு:- மெர்ஸா மாட்ருவுக்கு தென் மேற்கிலும் தென் கிழக்கிலும் நேற்றுக் கவசப்படைப் பிரிவுகளுக்கும் மோட்டார்ச் சாதனப் படைப் பிரிவுகளுக்குமிடையே அகோரமான யுத்தம் நடந்தது. அதிக விஸ்தீரணமான பகுதியிற் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. விபரங்கள் ஏதும் எட்டவில்லை.

மாட்ரூ பகுதியின் நிலைமை

பிருத்தானிய விளம்பர மந்திரி காரியாலய அறிக்கைகூறுவதாவது:

மெர்ஸாமாட்ரூ யுத்தம் ஏற்கெனவே ஆரம்பிகாதிருந்தால் அது ஆரம்பமாவதில் அதிக காலதாமதமிருக்க முடியாது. கடற்கரையிலிருந்து டாரெப் குன்றுகளை குபட்டார பள்ளத் தாக்குவரை பிரிட்டிஷ் படைகளிலிருந்துவருகின்றன. இவைகளின் பலம் ஏற்கெனவே அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதி இயற்கையில் சிறந்த பலம் பொருந்தியது. மெர்ஸா மாட்ருவுக்கு மேற்கே பல மைல் தூரம் மணற்குன்றுகளிருக்கின்றன. இவைகளில டாங்கிகள் சுலபமாக முன்னேறிவிட முடியாது. மாட்ருவுக்குத் தெற்கில் பீடபூமிப் பிரதேச மொன்றிருக்கிறது. இது கடல் மட்டத்திற்கு 600 அடி உயரத்திலிருக்கிறது. இப்பீடபூமி கடைசியாகக் குபட்டாரா பள்ளத்தாக்குடன் போய்ச் சேருகிறது. இதிலும் சத்துருக்கள் எளிதில் முன்னேற முடியாத சதுப்பு நிலங்களிருக்கின்றன. மெர்ஸா மாட்ருவின் வடகோடியில் புகைரதத் தொடர்பு இருக்கிறது. இப்பகுதிகளிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்குப் போதிய குடி தண்ணீர் 'சப்ளை'யிருந்து வருகிறது.

பாதுகாப்புகளில்லாத 100 மைல் தூரமுள்ள பிரதேசம் கைவிடப்பட்டு ஜெனரல் ரோமல் அலெக்ஸாண்ட்ரியா, கெய்ரோ ஆகிய நகர்களுக்கு நெருக்கும்படி யாகிவிட்டாலும், சத்துருவின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திவிடக்கூடுமானால மேற்படி நகர்கள் சிறிதும் பாதிக்கப்படமாட்டா.

சேபஸ்டபோலில் இன்னும் கடுமையான சமர்

சோவியத் நண்பகல் அறிக்கையென்று கூறுவதாவது:—

"ஜூன் மாதம் 28-ந் திகதி இரவு நமது துருப்புகள் குர்ஸ்க், செபஸ்டபோல் அரங்கங்களில் சத்துருவுடன் சண்டை செய்தன. ஏனைய அரங்கங்களின் நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதுமில்லை.

பிருத்தானிய விளம்பர மந்திரி காரியாலய அறிக்கையின் விபரம்:-

கார்க்கோவ் போர்முனையில் கார்க்கோவிற்குத் தென்கிழக்கே 60 மைல் தூரத்திலுள்ள குபியான்ஸ்கை காலி செய்துவிட்டதாக ருஷ்யர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் ஜெனரல்வான்பாக் ஏராளமான டாங்கிகளையும் விமானங்களையும் கொண்டு வந்து குவிப்பதாக மொஸ்கோ ரேடியோ கூறுகிறது. ஜெர்மன் தாக்குதலின் உக்கிரம் நாளுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால், ஜெர்மன் கோடைக்காலத் தாக்குதல் ஆரம்பமாகவில்லையென்று ஜெர்மன் இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். செபாஸ்டப் போலில் இன்னும் யுத்தம் நடைபெற்று வருகிறது. நகரம் ஏறக்குறையப் பாழடைந்து விட்டதென்று ருஷ்யச் செய்திகளிலிருந்து தெரிகிறது. நகரின் வடக்குப் பக்கத்தில் தான் ஜெர்மானியரின் தாக்குதல் பலமாக இருக்கிறது.

சத்துரு நீர்மூழ்கித்தளம் தாக்கப்பட்டது

பிரிட்டிஷ் விமானப்படை மந்திரி காரியாலய அறிக்கையொன்று கூறுவதாவது:-

நேற்று இரவு நமது வெடிகுண்டு விமானங்கள் செனாசை ரயிலுள்ள நீர்மூழ்கித் தளத்தைத் தாக்கின. போர்விமானங்கள் ஆக்ரமிக்கப்பட்ட பிரான்ஸிலுள்ள சத்துரு விமானத்தளங்களையும் புகைரதங்களையும் இங்கிலிஷ் சானலில் சத்துருவின் சரக்குக் கப்பல்களையும் தாக்கின. நமது வெடிகுண்டு விமானங்களில் ஒன்று திரும்பிவரவில்லை."

அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:- இங்கிலாந்தின் மேற்குக் கடற்கரைப்பகுதி தென்கடற்கரைப் பகுதி ஆகியவைகளுக்கு மேல் நேற்று இரவு சத்துரு விமானங்கள் காணப்பட்டன. வெஸ்டன் ஸுப்பர் மேர்நகரின் பல இடங்களில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அங்கு தீ விபத்துகள் ஏற்பட்டன. பொது மக்களின் வாசஸ்தலங்களுக்கும் கடைகளுக்கும் சேதமேற்பட்டது. அங்கே ஆள் சேதம் ஏற்பட்டதாகவும் தகவல் எட்டியிருக்கிறது. ஏனைய பகுதிகளில் சேதம் அதிகமில்லை. இரு சத்துரு விமானங்கள் நாசமாக்கப்பட்டன.

பேர்லின் வாசிகளின் அச்சம்

பிரிட்டிஷார் கோலோன் எஸ்ஸென் பிரேமன் ஆகிய ஜெர்மன் நகர்களை ஆயிரத்துக்கு அதிகமான விமானங்களால் தாக்கியது போன்று ஜெர்மன் தலைநகரையும் தாக்கக்கூடுமென்பதால் பேர்லின் வாசிகளிடையே அச்சத்தை உண்டு பண்ணியிருப்பதாக டைம்ஸின் விமானப்படை நிருபர் எழுதுகிறார். பிரிட்டனிலுள்ள விமானத் தளங்களுக்கு அமெரிக்க விமானங்கள் வந்து சேருகின்றனவென்ற செய்திகள் பேர்லின் வாசிகளின் அச்சத்தை மேற்கொண்டு அதிகரிக்கக்கூடும்.

ஜிப்ரோல்டரைத் தாக்கச் சத்துரு முயற்சி

மூன்று சத்துரு விமானங்கள் இன்று அதிகாலையில் ஜிப்ரோல்டர் கற்கோட்டையை வெடிகுண்டு எறிந்து தாக்க முயற்சித்தன. அவை மீது விமான வீழ்த்திப் பீரங்கிகள் கடுமையாகக் குண்டுகளைப் பிரயோகித்ததால் அவைகளால் சமீபத்தில் நெருங்க முடியாது போயிற்று. மிகச் சில வெடிகுண்டுகளே வீசப்பட்டன. பொருட்சேதமோ ஆள் சேதமோ கிடையாது. ஒரு விமானம் கிழக்குத் திசையில் திரும்பி ஓடும்பொழுது சோதனை விளக்கு வெளிச்சத்தில் அகப்பட்டது. அது படிப்படியாகக் கீழே இறங்குவது போன்று தோன்றியது.

"கண்டனத் தீர்மானம்"பற்றி விமர்சனம்

பிரிட்டிஷ் விளம்பர மந்திரி பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கை கூறுவதாவது:-

கண்டனத்தீர்மானத்தைப் பிருத்தானிய மந்திரிகள் வரவேற்பதாக டைம்ஸ் பத்திரிகையின் ராஜீய நிருபர் எழுதுகிறார். யுத்தத்தின் போக்கு நமக்கு விரோதமாக இருக்கும் காலங்களிலும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள ஆதரவை உலகிற்கு நிதர்சனமாகக் காண்பிக்கப் பாராளுமன்றத்திற்கு இக்கண்டனத் தீர்மானத்தின் மூலம் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்களென்று அந்நிருபர் கூறுகிறார்.

அப்பய்ய தீக்ஷிதர் வரலாறு

1(-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பிலேனோர் கைவிடப்படுவரோ! இவற்றைக் கேட்ட சின்னப்பொம்மராஜன் தீக்ஷிதர் பெருமானிடம் எல்லையற்ற பக்திபூண்டு ஒழுகி வருவானாயினன்.

சிவ நிர்மாலியம்

சின்னப்பொம்மராஜனுடைய மந்திரிமார் சிலர் சிவநிர்மாலியம் உட்கொள்ளத் தக்கதன்று என உரைத்தார்கள். வேந்தன் அதனைப்பற்றித் தீக்ஷிதரவர்களிடம் கேட்டான். அப்பெரியார் பலபுலவர்கள் கூடிய அரசசபையிலே அவ்விஷயத்தை விளக்கமாக எடுத்துரைத்தனர். அதன் விரிவை அப்பெரியாரியற்றிய 'சிவார்ச்சனா சந்திரிகை' என்னும் நூலிற் பார்க்கக் காணலாம். எனினும் அதன் சாரத்தைத் திரட்டிக் கூறுவாம்.

"மதிய புக்த நிர்மால்யம்பாதாம்புரு
சமர்தனம்|
தர்ம மர்த்தஞ்ச காமஞ்ச மோக்ஷஞ்
சத தத்திரமாத||

என்னால் அநுபவிக்கப்பட்ட நிருமாலியம், பாததீர்த்தம், பூ, பத்திரம் என்பவற்றை அன்போடு ஆசிப்பவன் முறையே அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை அடைவன் என்பதே மேற்குறித்த செய்யுளின் பொருளாம். வேறொரு சந்தர்ப்பத்தில் "சிவபெருமானுடைய நிருமாலியத்தைத் தரிக்கவும் உண்ணுதலும் ஆகாது" என்றும் கூறப்படுகிறது. ஆகவே முன்பின் விதி முரணுவதேனெனில், முரணன்று. சிவதீக்ஷையுடையவர்களே சிவநிர்மாலியத்தை அநுபவிக்கும் பாக்கியம் பெற்றவர்களென்பதும், சிவதீக்ஷையுற்றவர்கள் சிவநிருமாலியத்தைத் தொடவும் அருகதையற்றவர்கள் என்பதுமேயாம்.

"நிர்மாலியம் என்பதற்கு மலமற்றது என்பது பொருள். ஆதலால் அது பரிசுத்தமானது. சிவதீக்ஷையற்றவர்கள் மலசகிதர்கள். அவர்கள் மலரகிதமான பொருளை எவ்வாறு தீண்டலாம்? சிவதீக்ஷையற்றவர்கள் தூயதான சிவநிருமாலியத்தை அதன் சுவை நோக்கியேனும் அடைய முற்படுவாரேல் சௌரவம் முதலிய நரகத்தையடைவர்" என்று சிவபுராணம் கூறும்.

"தேவாதி தேவரான சிவபெருமானுடைய நிர்மாலியமான தீர்த்தத்தைப் பருகியவனிடத்து, க்ஷயம், குட்டம், காசம், சுவாசம் முதலிய நோய்கள் அணுகாவென்று வைத்திய நூல் கூறுகின்றது.

"தேவர்கள், இருஷிகள், கந்தருவர் ஆகியோர் அப்பொழுது பூமியையடைந்து சிவபெருமானுடைய திருமேனியினின்றும் விழுந்த தீர்த்தத்தை மிகவும் பரிசுத்தமானது என்ற காரணத்தால் பக்தியோடு புரோக்ஷித்துக் கொண்டார்கள்" என்று இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

(தொடரும்)

பெல்பாஸ்டில் மன்னரும் அரசியும்

பெல்பாஸ்ட் ஜூன் 28— மன்னர் பிரானும் மகாராணியும் வெள்ளிக்கிழமையன்று பெல்பாஸ்டுக்கு விஜயம் செய்து அல்ஸ்டரில் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கத் துருப்புகளையும் வேறுபல ஏற்பாடுகளையும் பார்வையிட்டனர்.

மன்னர் தம்பதிகள் அல்ஸ்டர் கவர்னராலும் பிரதம மந்திரியாலும் இதர பிரமுகர்களாலும் வரவேற்கப்பட்டனர்.

சென்னைப்பாதுகாப்புக் கைதிகள்

சென்னை ஜூன் 24— தற்போது மாகாணச்சிறைகளில் பாதுகாப்பிலுள்ள கைதிகளில் 138 பேர்களை விடுதலைசெய்யச் சென்னை அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இவர்களது சொந்த ஊர்விபரம் வருமாறு:—

சென்னைநகர்	4
தமிழ்நாடு	29
ஆந்திரா	32
மேற்குக்கடற்கரை	37

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00   அரைக்கலம் ரூபா 6.00
கால்கலம் ரூபா 4.00   ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாம். கடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

தெல்லிப்பழை மகாஜன ஆங்கிலவித்தியாசாலை ஸ்தாபகர் தினக் கொண்டாட்டம்

நிகழும் சித்திரபானுவருஷ ஆனி மாதம் 10உ (26-4-42) புதன்கிழமை மேற்படி வித்தியாசாலை ஸ்தாபகர் ஸ்ரீமான் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் பரகதியெய்திய தினக் கொண்டாட்டம் மகா தோரணங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வித்தியாசாலை மண்டபத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முற்பகல் 10 மணியளவில் நடராஜப் பெருமானின் திவ்விய திருவுருவப் படத்திற்கு விசேஷபூசை நடந்தேறிய பின்னர் ஞாபகார்த்தக் கூட்டமொன்று வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கா. சின்னப்பா அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. அத்தருணம் வழக்கறிஞர் திரு. க. இ. தம்பி B. A. அவர்கள் ஸ்தாபகருடைய குணாதிசயங்கள் அரியசேவைகளைப் பற்றியும், அவரின் சைவக் கொள்கையின் சிறப்பைப் பற்றியும் அவரால் இயற்றப்பெற்ற "கீதரசமஞ்சரி" "யாழ்ப்பாணக் கும்மி" "சிவமணிமாலை" முதலிய நூல்களிலுள்ள பாக்களின் பொருட் பொலிவைப் பற்றியும் அவருக்கும் தற்கால ஆசிரியர்களுக்குமுள்ள தாரதம்மியங்களைக் குறித்தும் மிகவும் உணர்ச்சியோடு பேசினர். பழைய மாணவர் திரு. பொன். அம்பலவாணர் அவர்களும் திரு. சி. நடராசா அவர்களும் ஸ்தாபகரின் மகத்துவமான சீவியம், சுயநலங்கருதாத தொண்டு, புலமை ஆகியவற்றைப்பற்றிக் குறிப்புரை கூறினர். திரு. ஆ. வே. சிற்றம்பலமவர்கள் விரிவுரையாளருக்கு நன்றி கூறக் கூட்டம் 12 மணியளவில் முற்றுப்பெற்றது.

மாலை 7 மணியளவில் கூடிய பகிரங்கக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து பெருந்திரளான பெரியோர்கள் சமூகமளித்த காட்சியின் மாட்சி குறிப்பிடத்தக்கது. Lady இராமநாதன் அம்மையாருடைய தலைமையில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயதும் வித்தியாசாலை மாணவர் இருவரால் ஓர் வந்தனோபசாரப்பா பாடப்பட்டது. அதன்பின் குவாலாலம்பூர் சங்கீத சபையைச் சேர்ந்த சங்கீத பூஷணம் திருவளர் செல்வி பாஞ்சோதி இராமசாமி அம்மையாரால் 'கீர்த்திமாலினி' என்னும் சரித்திரம் பக்கவாத்திய சகிதமாகக் கதாப்பிரசங்கம் மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டது. அம்மையாரின் பக்திரசம் நிறைந்த இனிய செந்தமிழ் நடையும், சொல் நயம் பொருள் நயத்தின் பொலிவும், சரித்திரத்தைத் தொடர்ச்சியாகக் கூறும் வன்மையும், பாடப்பெற்ற இனிய கீர்த்தனங்களும் ஏனையபாக்களும் சபையோரின் மனதை வசீகரிக்கும் தன்மை வாய்ந்தனவாயிருந்தன. எவராலும் மெச்சப்படத்தக்கது. ஸ்ரீமான். சு. நடேசபிள்ளை B. A. B. L. M. S. C. அவர்கள் குறிப்புரை கூறும்பொழுது பாஞ்சோதி அம்மையாரின் கதாப்பிரசங்கத்தின் சிறப்பைக் குறித்து மிகவும் வியந்து பேசினர். அம்மையார் பெண்மணிகளுள் தலைசிறந்து விளங்கும் தன்மையும், அன்னாரின் கதாப்பிரசங்கத்தின் தனிச்சிறப்பும் அவரின் செந்தமிழ்ப் பாண்டித்தியத்தின் மாண்மையும் சங்கீதச் சுவையும் யாவரும் மெச்சிப் புகழத்தக்கனவென மிகவும் பாராட்டிப் பேசினர். கதாப்பிரசங்கத்திற்குரிய சகல இலட்சணங்களும் பொருந்திய அந்த தன்மையைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டனர். சங்கீதத்தில் மிகவும் ஆர்வமுள்ளவராயிருந்த ஸ்தாபகர் ஞாபக தினத்தில் ஓர் சங்கீத கதாப்பிரசங்கம் விசேஷநிகழ்ச்சியாயமைந்தது மிகவும் பொருத்தமுடைத்தெனக் கூறி, அம்மையார் சுகாத்திர தேகமும், சகல பாக்கியங்களும் நிரம்பப்பெற்று நீடூழிகாலம் வாழ்ந்து சிறந்த தொண்டாற்றத் தக்கதாக எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக என ஆசீர்வதித்தனர். அதன்பின் வழக்கறிஞர் திரு. கு. கா. கனகராயர் அவர்களின் பாரியார் தலைவருக்கும் பிரசாரகருக்கும் பக்கவாத்தியகாரருக்கும் சபையிற் சமூகமாயிருந்த பெரியோருக்கும் நன்றி கூறும்பொழுது பாஞ்சோதி அம்மையார் பெண்மணிகளுக்கெல்லாம் தமது அரிய பிரசங்கத்தால் ஓர் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறாரென்றும் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தமது அறிவு ஆற்றலின் பயனாய் உரியவகையிலே புரிந்திருக்கிறாரெனவும் கதாப்பிரசங்கஞ்செய்யுமுறையில் ஒப்பாரும் மிக்காருமற்ற உத்தமியாய்த் திகழ்ந்து விளங்கும் அம்மையாரின் செந்தமிழ்ச் சிறப்பும் பாக்கள் பாடும் திறனும் ஆண்மக்களையும் வெட்டித் தலைகுனியச் செய்து விட்டன வென்றும் உற்சாகமாகக் கூறினர், பின் கூட்டம் 10 மணியளவில் தேவார பாராயணத்துடன் நிறைவெய்தியது.

—கடித.

கச வியாதிக்கு வசிலோசைன் மருந்து
(Cure For Consumption;- Bacillozine Specific)

பலவிதமான மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி சுகப்படாமல் இருப்பதற்குக் காரணம் டியூபெர்க்கிள் கிருமியின் தன்மைதான். வசிலோசைன் மருந்தினால் டியூபெர்க்கிள் கிருமித் தன்மையுள்ளதும் இல்லாததுமான கசம், இருமல், தொய்வு, பீனிசம், மூழங்கால் வாதம், சூலை வியாதிகளும், தலை, கண், காது, மூக்கு, முகம், வாய், தொண்டை, மூச்சுப்பை, இரத்தாசயம், குரல், கெற்பப்பை, சலப்பை, புண், பிளவைரோகங்களும் செதிலில் பூரண சுகத்தையடைகிறது மல்லாமல் வசிலோசைன் மருந்தைப் பாவிக்கத் தொடங்கிய 12 மணி நேரத்திற்குள் மனச் சந்தோஷத்தையும், ஊக்கத்தையும், புதிய பலத்தையும் ஆறுதலான நித்திரையையும் அடையலாம். வீ—பீயில் மருந்து பெறுவோர் ரூபா இரண்டு முற்பணம் அனுப்பவும்.

15 நாள் மருந்து ரூபா 7—75

விலாசம்:— Dr. S. V. Tambiah,
Dutch Road, Uduvil, MANIPAY, P. O.

Y 17 27-4.42—26.4.43

பிரதானமான அறிவித்தல்
லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்றர். S. சாஸ் பத்திராஜு

இப்போது கிறைண்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவத் தோட்டம், வரிப்பபோலா, வடமேல்மாகாணம்.

Y115 18-5-42—17-8-42

த மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்
"புறொப்றைட்டர்" K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4-3-42—3-3-43

சமாதான நீதிவானுக்கு வந்தனோபசாரக் கூட்டம்

மானிப்பாய்
25-6-42

மானிப்பாய் இந்துக்கல்லூரிப்பிரதம ஆசிரியர் திரு. வி. வீரசிங்கம் சமாதான நீதவான்பட்டம் பெற்றதனால் மகிழ்வுற்ற அக்கல்லூரி உபாத்தியாயர்களும் மாணவர்களும் அவர்க்கோர் வந்தனோபசாரக்கூட்டம் இம்மாதம் 19-ந் திகதி மாலை 4½ மணிபோல் நடத்தினர். சாயந்தரம் 4 மணிக்கு இவர்கள் அவரில்லஞ்சென்று மேளவாத்தியத்துடன் அழைத்து வந்தனர். வரும் வழியில் பிரதம உதவியாசிரியரான திரு. சி. நவரத்தினத்தின் சிறு புதல்வி பத்மாசனதேவியார் பூமாலை சூட்டப்பெற்றுச் சந்தனம் பனிநீர் வழங்கியபின் பாடசாலை நோக்கிச்சென்றனர். மிஸ்றர். W. A. மேதர் அவர்களின் வாசலில் மேற்படி மேதராலும் பூமாலை போடப்பட்டபின், கல்லூரி வாசலை அடைந்தனர். அங்கு உபாத்தியாயர்கட்காக ஒன்றும் மாணவர்க்காகவொன்றுமாக இரு பூமாலை சூட்டப்பெற்றார். பின் அவரை அழைத்துப்போய் இக் கொண்டாட்டத்துக்காக ஆயத்தப்படுத்தியிருந்த மேடைமீது இருத்தினர். அவர் பக்கங்களில் அன்று அக்கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த இக்கல்லூரி உபமனேச்சரும் சமாதான நீதவானும் பிறக்றருமாகிய திரு. முருகேசபிள்ளை அவர்களும் அமர்ந்திருந்தனர். அங்கு யாழ்ப்பாணத்திலுள்ள பலகல்லூரிகளிலிருந்து வந்த உபாத்தியாயர் உபாத்தியாயினிகளும் பல நூற்றுக்கணக்கான உள்ளூர்ப்பிரபுக்களும் பெண்மணிகளும் பாடசாலை மாணவரும் குழுமியிருந்தனர். இவர்களெல்லோருக்கும் பசிற்றுண்டி, தேநீர், குளிர்பானம் வழங்கப்பட்டன. பின், பாடசாலைப் பண்டிதர் திரு. தா. சுவாமிநாதன் அவர்களால் அத்தருணத்திற்கென ஆக்கப்பெற்ற பாக்களை சுதுமலைப் பழையவிதானையார் திரு. முத்துத்தம்பியால் மிகஇனிமையாகப் பாடப்பட்டன.

பாடசாலை உபாத்தியாயர்களது வந்தனோபசாரப்பத்திரமும் வாசிக்கப்பட்டன. அப்பொழுது அக்கிராசனர் எழுந்து இவர் இக்கலாசாலையில் சென்ற இருபதாண்டாகத் தலைமை ஆசிரியராக இருக்கிறாரென்றும் இவர்காலத்தில் இக்கல்லூரி அதிமுன்னேற்றமடைந்திருக்கின்றதென்றும் இவர் சரியாய் தன் கடமையை மிக்க சிரமத்தோடு பார்த்து வருகிறாரென்றும் இவரது குணாதிசயங்களை விதந்துபேசி இவருக்கு இப்பட்டம் தகும் தகும் எனச் சொற்றனர். அதன்பின் அதிகார் சுகராத முதலியார் எழுந்து இவரை வெகுகாலமாகத் தெரியுமென்றும் கல்வியில் மிக்க ஆர்வமுடையவரென்றும் இப்பாடசாலைக் கடமையோடு நில்லாது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பல சங்கங்களில் சிலவற்றில் அங்கத்தவராகவும் சிலவற்றில் அக்கிராசனராகவும் விளங்குவதைக் கண்டு ஆனந்தமடைந்தாரென்றும் கூறினர். அன்றியும் தனக்குச் சோதிடஞ் சிறுகத் தெரியுமென்றும் தான் முன் நுவரெலியாவில் சிறப்பு உத்தியோகம் நடத்திய காலத்தில் தன்னிடம் வந்து சோதிடம் கேட்ட ஆங்கிலேயர்களில் மூவர் பெருசுக் கவுணர் வேலைக்கு உயர்த்தப்படுவார்களென்று தாம் சொன்னதாகவும், அவர்களில் இருவர் கவுணர் பதவிக்கு உயர்த்தப்பட்டனரென்றும் ஒருவர் இலங்கையிலேயே சிலகாலம் உபகவுணராய்க் கடமைபார்த்து ஆகாப்பாறவர் சென்றனரென்றும் கூறினர். இப்போது இவருக்கும் தான் ஒரு சாதகஞ் சொல்லப்போகிறதாகவும் இவர் சில காலத்தில் சட்டசபை அங்கத்தவராகப் போவாரென்றும் அங்கு சென்று சும்மா விராமல் மந்திரி பதவியை அடைந்து அச்சட்ட சபையிலிருந்து வரும் பிழைகளைத் திருத்துவாரென்றுங் கூறி இவர் பல்லாண்டு வாழ வேண்டுமெனவும் வாழ்த்தி, முடித்தனர். அதன்பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் திரு. A. குமாரசாமியும் சென்ஜோன்ஸ் கல்லூரிப் பிரதம ஆசிரியர் கனம் அருளானந்தம் செல். பற்றிரியார் கல்லூரி Rector றெக்றர் வணக் லோங் குரு உப பிரதம வித்தியாதரிசி திரு. சி. சற்குணம் முதலியோரும் எழுந்து இவரது குணநயங்களை வியந்து பேசி ஆசிரியர்களுக்காகவும் தங்கள் கல்லூரிகளுக்காகவும் இவரை வாழ்த்துதல் கூறினர். ஈற்றில், புதிய சமாதான நீதவானான திரு. வீரசிங்கம் எழுந்து இவ்வமயம் இவ்வளவு திரளான பிரபுக்களும் பெண்மணிகளும் வந்திருப்பதைக் காணப்பது சந்தோஷம். இந்த J. P. பட்டத்தை நான் எதிர்பார்க்கவில்லை. இதனால் மகிழ்பவர்கள் இக்கல்லூரியின் பழைய புதிய மாணவர்களும் உபாத்தியாயர்களுமே யாவர் என்பதை நான் அறிந்து சந்தோஷப்படுகின்றேன். மாணவர் வாய்மை, நேர்மை, தூய்மை, அன்புள்ளவராய் இருக்கவேண்டுமென்பதே என்னது நோக்கம். என் கடமையைச் சரிவரச் செய்தேனென்பது சத்தியம் என்றும் கூறி அங்கு கூடியிருந்த சகலர்க்கும் வந்தனஞ் சொல்லி முடித்தனர். அக்கலாசாலை ஆசிரியரில் ஒருவரான சண்முகம் அவர்கள் அங்கு வந்திருந்தோர்க்கு வாழ்த்துக் கூறக் கரகோஷத்துடன் கூட்டம் முடிவெய்தியது.

—கடித.

வியாபாரத்திற் கழகு
விளம்பரஞ் செய்தல்
அதற்குகந்தது
இந்துசாதனம்

அரசாங்கத்தின் கையிருப்பில் இருக்கும் சீனி

விற்பனைக்கு விடப்பட்டிருக்கிறது

எல்லா டிஸ்திறிக்குகளுக்கும் 'சப்ளை' கிடைக்கும்

அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்டுச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் சீனியை அரசாங்கம் இவ்வார ஆரம்பத்தில் விற்பனைக்கு விடுவார்களென்று தெரிகிறது. ஒவ்வொரு டிஸ்திறிக்குக்கும் அதற்கு வேண்டிய சீனி ஒதுக்கப்படும். பிரதானமான இடங்களிலுள்ள ரிஜிஸ்டர் செய்து கொண்ட வியாபாரிகளுக்கு 'பேர்மிட்' முறையில் சீனி கொடுக்கப்படும். சில்லறை வியாபாரிகளிடமிருந்து தங்களுக்கு வேண்டிய சீனியை வாங்கிக் கொள்ள வேண்டும். புதிய திட்டப்படி சில்லறை வியாபாரிகளுக்கு 'பேர்மிட்' தேவையில்லை. இத்திட்டப்படி பெரிய வியாபாரிகளிடமிருந்து தங்களுக்கு வேண்டிய சீனி பெறுவதில் இவர்களுக்கு ஒரு கஷ்டமுமிராதென்று நம்பப்படுகிறது. வியாபாரிகள் அகவிலைக்கு விற்பதைத் தடுப்பதற்காக ஒவ்வொரு இடத்திலும் பல வியாபாரிகளை ரிஜிஸ்டர் செய்து அவர்களுக்கு 'பேர்மிட்கள்' வழங்கப்படும்.

இந்தியாவிலிருந்து இறக்குமதியாயிருக்கும் வெள்ளைச் சீனியையும், பழுப்புச் சீனியையும் அரசாங்க மார்க்கெட்டு விற்பனைக்குக் கொண்டு வருவார்களென்று தெரிகிறது. இவை விற்பனைக்கு வரும்பொழுது விலைகள் அறிவிக்கப்படும்.

வெள்ளைச் சீனியின் விலை இப்பொழுது கிடைக்கும் சீனியின் விலையை விடச் சற்று அதிகமாகவிருக்குமென்று தெரிகிறது. விலை யுயர்ந்த இச்சீனியை வாங்கமுடியாதவர்கள் வாங்குவதற்காக மலிவாகவுள்ள ஒருவித பழுப்புச் சீனி 'மார்க்கெட்டி'ல் இருக்கும்.

இப்பழுப்புச் சீனி சுத்தஞ் செய்யப்படாத சர்க்கரை யல்ல. இப்பொழுது உபயோகிக்கப்படும் வெள்ளைச் சீனியைவிட இது மிகவும் நேர்த்தியானது.

மேலே கூறப்பட்ட திட்டம் வெற்றிகரமாக நடைபெறுமென்று அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள். ஒருவேளை அவசியமேற்பட்டால் சீனி விநியோகத்தை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது. அதாவது ஒவ்வொரு இடத்திலும் சீனி டிப்போக்களை அரசாங்கம் ஏற்படுத்துவதேயாகும்.

விமானத்தாக்குதலில் காயமடைந்தவர்கள்

விமானத் தாக்குதல்களினால் அல்லது சத்துருவின் ஏனைய நடவடிக்கைகளினாலும் காயமடைந்தவர்களை அடிக்கடி பரிசோதனை செய்யும்படி அரசாங்க வேலையிலிருக்கும் வைத்திய அதிகாரிகளுக்கு வைத்திய சுகாதார இலாகா டைரக்டர் (பொதுஜனப் பாதுகாப்புக் கொம்மிஷனர் கேட்டுக்கொண்டதன் பேரில் உத்தரவிட்டிருக்கிறார்.

காயமடைந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் 'அலவன்ஸ்கள்' சம்பந்தமாகக் காயமடைந்தவர்களை அடிக்கடி பரிசோதனை செய்யவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

காயமடைந்தவர்கள் குணமடைந்து அவர்களின் வழக்கமான தொழிலை மீண்டும் தொடங்கத் தகுதியுடையவர்களானதும் 'அலவன்ஸ்' வழங்குவது நிறுத்தப்பட்டுவிடும். காயமடைந்தவர்கள் நீண்டகாலத்திற்குத் தமது 'அலவன்ஸ்'களைப் பெறுவது சாத்தியமானதாயிருப்பதால், அத்தகையவர்கள் அடிக்கடி வைத்தியப் பரிசோதனை செய்யப்படவிருக்கின்றனர்.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லை ♣
தமிழ் ரூபா 5.00 இங்கிலீஷ் தமிழும் 9 0
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
தொலைவிடப் பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

இருமல், இளைப்பு
சுகமானவர் மதிப்புரை.

கொழும்பில் 112, 2ம் குறுக்குத்தெருவில் ஓர் பிரபல ஜவுளிவர்த்தகர் சொல்லும் செய்தி:—

ஸ்ரீ. M. S. மரைக்காயர்

"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாச காச நோயால் நான் இரண்டுவருஷகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்.

தண்டபாணி வைத்திய சாலையில்

தாளகபஸ்பமும் சித்திரமூலச் சூரணமும் ரூ. 12-50க்கு வாங்கி 25நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன்.

பின்பு இதுவரை 2வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள் வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிறார்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19-10-40.

(ஒப்பம்) E. A. M. S மரைக்காயர்.

இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேல் நோய்களுக்கு
25 நாள் தாளக பஸ்பம்
,, சித்திர மூலச் சூரணம் } ரூ 12-50

நோய் விவரம் எழுதவும்.   கேட்லாக் இனாம்

தண்டபாணி வைத்தியசாலை,
பழனி (PALNI, S. India)

(Q. 59. 18-6-42—17-9-42)   (வி)

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)   (Y. 164. 1-11-41 to 31-10-42)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்

வெளியிட்ட பாலபாடங்கள்

(முதற்றொகுதி)

1. சிறுபிள்ளைப் பாடம்: (சித்திரசகிதமானது) குழந்தைகள் ஆரம்பத்திற் பயில வேண்டியதாகிய இப்புத்தகம் புதிய முறையில், சித்திரங்கள் செறிந்ததாய், திட்பமாகப் பெரிய எழுத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பிரதிகள் விரைவிற் சேதமுறாதபடி தடித்த மட்டையிட்டுக் கட்டப் பெற்றுள்ளது. விலை சதம் 15.

2. முதற்பாலபாடம்: பல்லாயிரக் கணக்காக வருடந்தோறும் அச்சிடப்படுவது. சித்திரங்கள் விரவியதாய்ப் பெரிய எழுத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. விலை சதம் 12.

3. இரண்டாம் பாலபாடம்: சித்திர சகிதமானது; செய்யுட் பாடங்கள் அரும்பத விளக்கம் முதலியவற்றுடன் கூடியது. விலை சதம் 25.

4. மூன்றாம் பாலபாடம்: சித்திர சகிதமானது; செய்யுட்பாடம், அரும்பத விளக்கம், செய்யுள்கட்கு உரை முதலியவற்றைக் கொண்டது. விலை சதம் 30

5. நான்காம் பாலபாடம்: சித்திரசகிதமானது; அரிச்சந்திரன் கதை முதலிய சிறந்த கதைகள், சிறுவர்க்கு அறிவையூட்டும் ஏனைய பாடங்களும், நீதிநூற் செய்யுட்களும், அரும்பத விளக்கம், செய்யுட் பாடங்களுக்குப் பதவுரை முதலியன கொண்டது. விலை சதம் 40.

6 ஐந்தாம் பாலபாடம்: சித்திரசகிதமானது; ஸ்ரீராமர் நளன் முதலியோருடைய சரித்திரங்களை விரித்துக் கூறுவது. செய்யுட்பாடம், நீதிநூல், அரும்பத விளக்கம், செய்யுட்பாடவுரை யென்னு மிவைகளைக் கொண்டது. விலைசதம் 50

7 ஆறாம் பாலபாடம்: சாவித்திரி சரித்திரம், குமணசரித்திரம் முதலிய பல அரிய பாடங்களைக் கொண்டது. அரும்பதவிளக்கம், செய்யுட்பாகம் முழுவதற்கும் உரையென்னு மிவைகளோடு கூடியது. விலை சதம் 60.

8 ஏழாம் பாலபாடம்: பாண்டவர் நாட்டிற் கரந்துறைதல் முதலான சரித்திரங்களையும், பல அரிய வியாசங்களையும், செய்யுளிற் சாவித்திரி சரித்திரத்தையும் இன்ன பிற அரிய விஷயங்களையும், அரும்பதவிளக்கம், செய்யுட்பாடவுரை ஆதியனவற்றையும் கொண்டது. விலை சதம் 70.

9 எட்டாம் பாலபாடம்: வசனபாகம், செய்யுட்பாகம் என்னு மிருபாகமாகப் பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. உயரிய செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள்ளது. அரும்பத விளக்கம், செய்யுட்பாகவுரை முதலியன அடங்கியுள்ளது. விலை சதம் 85.

[இப் பாலபாடங்கள் ஒன்பதும் இலங்கை வித்தியாதிகாரியின் அங்கீகாரம் பெற்றுள்ளன; வித்தியா பகுதியாரின் நிபந்தனைகட்கமையத் தொகுக்கப் பெற்றன. தனித்தனி பல பதிப்புக்களை யடைந்துள்ளன. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் பெரிய அட்சரங்களில் தெளிவுற அச்சிட்டு அழகுறக் கட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் உள்ள சைவ வித்தியாசாலைகளிலும் அரசினர் பாடசாலைகளிலும் உவந்தேற்று உபயோகிக்கப்படுவன. எல்லா வகுப்பிலும் சபையார் பாலபாடத்தை உபயோகிக்கும் வித்தியா சாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை பாதிக் கிரயம் மாத்திரம் பெற்றுக் கொண்டு கிரமமாக அனுப்பப்படுகின்றது.]

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 1st July, 1942.